1564

21ம் நூற்றாண்டில்
உலமாக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

# முரண்பாடுகளும் தெளிவுகளும் ஒரு முச்சந்தி!

எம். எச். எம். அஷ்ரஃப்

அல்ஹம்துலில்லாஹ்!

எதிர்பாராத ஒரு பணி நிறைவேறுகின்றது. எல்லாப் புகழும் வல்ல அந்த அல்லாஹ்வுக்கே! கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமான உலமாக் காங்கிரஸ் மகா நாட்டை 9.10.1999 ல் ஆரம்பித்து வைத்துப் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் சிறப்புப் பேருரையை சூட்டோடு சூடாக வெளியிடப்பட வேண்டுமென்ற முடிவு திடீரென எடுக்கப்பட்டது.

21ம் நூற்றாண்டில் உலமாக்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளைத் தொட்டுக் காட்டும் போது எல்லோருடைய மூளைகளையும்கூட அவரது உரை உழுது கொண்டு சென்றது. வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த உரையை ஆவணப்படுத்த வேண்டியது 21ம் நூற்றாண்டை எதிர்நோக்கும் முஸ்லிம்களுக்கு நாம் செய்யும் மாபெரும் பங்களிப்பாகும்.

24 மணி நேரத்துள் எழுத்துப்பிரதியில்லாத ஒரு பேச்சைக் கேட்டெழுதி இவ்வளவு சிறப்பாக வெளியிட உதவிய எமது சொத்து சகோதரர் எம். பௌசர் அவர்களுக்கு உலமா காங்கிரஸ் என்றும் கடமைப்பட்டுள்ளது. கணணி பணிகளில் உதவிய சகோதரர் எம்.எஸ்.எம். றிகாஸ் அவர்களுக்கும் துணை புரிந்த சகோதரர் எம்.எச். முஸ்தாக் முஹம்மட் சகோதரர் ஏ.எல். அப்துல் ஹக்கீம் அவர்களுக்கும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம் ஞாயிற்றுக் கிழமை என்றும் பராமல் அழகாக அச்சிட்டு உரிய நேரத்தில் தந்த **Uni Arts** அச்சகத்திற்கும் அதன் உரிமையாளர் சகோதரர் விமலேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றிகள்!

**மௌலவி ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் !

கண்ணியத்திற்குரிய உலமாப் பெருமக்களே! சங்கைக்குரிய சாதாத்மார்களே! இன்றைய வரலாற்று முக்கியத்துவமிக்க உலமாக்களுடைய அமர்வுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய சகோதரர் மௌலவி ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி அவர்களே! உலமாக் காங்கிரஸின் பணிப்பாளராக இருந்து, இரவு பகலாகக் கஷ்டப்பட்டு, தேசிய ரீதியில் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு மத்தியில் உலமாக்களை நாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் இங்கு வெற்றிகரமாக அழைத்திருக்கின்ற சகோதரர் மௌலவி எச்.எம்.எம். இல்யாஸ் அவர்களே! இன்றைய நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாக வந்து சிறப்பித்து நம்மெல்லோருக்கும் சிந்தனை பூர்வமான கருத்துக்களைத் தந்துவிட்டு அமர்ந்திருக்கின்ற நமது எல்லோருடைய பெருமதிப்புக்குமுரிய மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அஸ்ஸெய்யித் அலவி மௌலானா அவர்களே! பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் சகோதரர் ரவூப் ஹக்கீம் அவர்களே! உலமாப் பெருமக்களே! ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர்பீட உறுப்பினர்களே! முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களே! வெளிநாட்டுத் தூதுவர்களே! உங்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு!

I would like to just say a few words in English for the benefit of Your Excellencies, thereafter I propose to switch over to the Tamil language for the benefit of the larger audience that is here.

This is a historic gathering of the Ulemas of this country. The Ulema Congress is having this session consecutively for the 5th time. Today's theme would be the challenges faced by the Ulemas on the threshhold of the 21st century. Islam all over the world is facing and is going to face tremendous problems in the next millenium, especially the 21st century, and our defenders are none other than the Ulemas. Very unfortunately, our Ulemas, our brothers, lack the ncessary morale and other support to defend the cause of Islam.

It is our duty to make them feel that they are not alone in this struggle, that we are there to support them in defending us. This is, therefore, we thought, on behalf of the Sri Lanka Muslim Congress that we would have this gathering today and tomorrow and at the sessions to follow they are going to deliberate

on serious issues, and they will be passing resolutions tomorrow and based on those resolutions this conference will proceed towards its next conference Insha Allah in next year that is year 2000. We are also making use of this opportunity to honour those Ulemas who are 70 years old and above, who have rendered services to the nation, to the people, to Islam and the cause of Islam for more than almost 50 years and they will be given and conferred the special title called "Sheik - Ul - Ulema" and we will decorate them. We hope that will be a good encouragement for them and for the youngsters too so that they will feel that there is this community that appreciates the services rendered by Ulemas.

With those few, introductory words, I would ask your permission to leave me to talk to those guests who are here, in the language, in which, they will be much more comfortable.

**தூங்குகையில் இயங்கும் பிரபஞ்சம்!**

கண்ணியத்திற்குரிய தலைவர் அவர்களே! உலமாப் பெருமக்களே! இது ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு நாளாகும். இன்றைய நாளில் நாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்ற போதும் நாங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்ற போதும் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வுத்தஆலா உலகத்தைப் படைப்பதற்கு முன்பிருந்தே இயங்குகின்றான், உலகம் முடிகின்ற வரையும் அவன் படைத்த அந்த உலகம் சதா இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு சிலர் மாத்திரம்தான் நாங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றோம்; நாங்கள் ஓய்வெடுக்கின்றோம்; நாங்கள் களைப்பாறுகின்றோம்; ஆனால் அல்லாஹ்வுத்தஆலா தூங்குவதுமில்லை; அவனுடைய அமரர்கள் தூங்குவதுமில்லை; அவர்கள் களைப்படைவதுமில்லை. அந்த இயக்கம் உலகம் முடிகின்ற வரையும் இருந்து கொண்டேதான் இருக்கும்.

**மிலேனியம் எனும் பிரளயம்?**

இந்த இயக்கத்தின் ஒரு முக்கியமான மாற்றம் உலகம் படைக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரையும் எதிர்கொள்ளாத பெரியதொரு மாற்றம் இன்னும் ஒரு சில நாட்களுக்குள் நடக்கவிருக்கின்றது. அதுதான் (The Next Millenium) அடுத்த மிலேனியம் என்று இன்று எல்லோரும் பேசிக் கொண்டிருக்கின்ற பெரியதொரு பிரளயமாகும். பிரளயம் எனும் வார்த்தையை ஏன் பாவிக்கின்றேன் என்றால்; வழமையாக பிரளயம் என்று சொல்வது குழப்பத்தைக் குறிக்கும். இந்த மிலேனியத்தின் விளைவுகளும் குழப்பமாக அமையலாம். ஆகவேதான், பிரளயம் என்ற வார்த்தையை இங்கு பாவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்னும் ஏறத்தாள 90 நாட்களில் 20ம் நூற்றாண்டு மறையப் போகின்றது. 21ம் நூற்றாண்டுக்குள் நாங்கள் காலடி எடுத்து வைக்கப் போகின்றோம். இந்த 21ம் நூற்றாண்டு என்பது என்ன? அடுத்த "மிலேனியம்" என்று நாங்கள் சொல்வது என்ன? இன்றைய விஞ்ஞானத்தின் நம்ப முடியாத போக்குகள், விஞ்ஞானம் சென்று கொண்டிருக்கின்ற வேகம், அந்த வேகத்தோடு நின்று பிடிக்காமல் நாம் மாத்திரம் ஒதுங்கி இருப்போமாக இருந்தால் எங்கு நாம் சென்று அடையப் போகின்றோம்? எந்த முடிவை நாம் எதிர்நோக்கப் போகின்றோம்? என்ற கேள்விகளுக்கு விடை காணாமல் நாம் இருக்க முடியாது!

**எல்லாம் தெரியுமென்ற ஏமாற்றமா?**

அன்புக்குரிய சகோதரர்களே! கண்ணியத்திற்குரிய உலமாப் பெருமக்களே! நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவை எடுத்துக் கொண்டாலும் சரிதான்; உலக நாடுகள் எங்கு என்றாலும் சரிதான் உலமாக்கள் என்ற ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரையும் அந்த உலமாக்களை உருவாக்குவதில் உருவாக்குகின்ற முறைகளில் அந்தப் பாதைகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. நாங்கள் இன்னும் பழைய பாடங்களைத்தான் படித்துக் கொண்டிருக்கின்றோம். பழைய பாதைகளில்தான் நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம். எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்ற ஒரு காலகட்டத்தில், இங்கு சகோதரர் மௌலவி புஹாரி அவர்கள் பேசுகின்ற போது "நீல்ஆம்ஸ்ரோங்" சந்திர மண்டலத்திலே காலடி எடுத்து வைத்த அந்த சந்தர்ப்பத்தை சொல்லிக் காட்டினார்கள். எனக்கு அப்போது ஒரு விசயம் ஞாபகத்திற்கு வந்தது. இந்தியாவிலே இருந்து அந்தக் காலத்தில் "ரஹ்மத்" என்ற ஒரு மாதாந்த சஞ்சிகை வந்து கொண்டிருந்தது. அந்த சஞ்சிகையை ஒவ்வொரு மாதமும் வாங்கி ஆவலோடு படிக்கின்றவர்களில் ஒருவனாக இருந்தேன். அந்த சஞ்சிகையிலேயே அச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த மௌலானா மௌலவி கலீலுர்ரஹ்மான் என்றவர் மிகவும் திட்டவட்டமாக திருக்குர்ஆன், ஹதீஸ்களை ஆதாரங்காட்டி எந்தக் காரணம் கொண்டும் மனிதன் சந்திரனிலே காலடி எடுத்து வைக்க முடியாது என்று எழுதியிருந்தார். அன்றிலிருந்தே அந்த சஞ்சிகையை வாசிப்பதை நிறுத்திக் கொண்டேன். இங்கு சொல்ல வருகின்ற விஷயம் என்னவென்றால், எங்களுக்குத் தெரியாத விடயங்களில் நாங்கள் கைகளைப் போடுகின்றோமா? அல்லது நாங்கள்

இன்னும் தெரிந்தது என்று நம்பிக் கொண்டிருக்கின்ற தெரியாத பல விஷயங்கள் இன்னுமின்னும் இருக்கின்றனவா? என்ற கேள்வி எழுப்பப்பட வேண்டும்.

**அறிவதற்கான அனுமதி மாத்திரமா?**

அன்புக்குரிய சகோதரர்களே! ஒரு சட்டத்தரணியாக உங்களோடு ஒரு சில நிமிடம் பேச முடியுமென்றால், அதற்கு நீங்கள் என்னை அனுமதித்தால் என்னுடைய வாழ்க்கையிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கு சொல்லலாம் என்று நினைக்கின்றேன். நாங்கள் சட்டக் கல்லூரிக்குச் சென்று, நான்கு வருடங்கள் படித்தோம். படித்து முடிந்து சட்டத்தரணியாக வெளிவருவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு போய் சத்தியப் பிரமாணம் செய்கின்ற அந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டக் கல்லூரியின் அதிபர் அவர்கள் எங்களை அழைத்து எங்களோடு பேசினார். அப்போது ஒரு விஷயத்தைச் சொன்னார். "நீங்கள் நாளையிலிருந்து சட்டத்தரணியாக வர இருக்கிறீர்கள். உயர் நீதிமன்றத்திலே சத்தியப் பிரமாணம் செய்யப் போகின்றீர்கள். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். சட்டத்தைப் படிப்பதற்கான அனுமதி மாத்திரம் இப்போதுதான் கிடைத்திருக்கின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு சட்டம் தெரிந்ததாக எண்ணி விடாதீர்கள்" என்று சொன்னார். சட்டத்தரணி பதவி சட்டத்தைப் படிப்பதற்கான அனுமதியேயொழிய சட்டம் தெரிந்து விட்டது என்பதற்குரிய சான்றிதழ் அல்ல என்ற ஒரு கருத்தையவர் சொன்னார். இதே கருத்தை இன்று உலமாக்களுக்கு மத்தியிலே சொல்லி வைப்பது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

நாங்கள் மத்ரஸாவிலே ஏழு, எட்டு வருடங்கள் படித்துவிட்டு வெளியேறுகின்ற போது, எங்களுக்கு அந்த மத்ரஸாக்களிலே ஒரு சான்றிதழைத் தருகின்றார்கள். அந்த சான்றிதழ் என்பது இனிமேல் எங்களுக்கு படிப்பதற்கு அவசியம் இல்லை என்ற சான்றிதழா? அல்லது இஸ்லாத்தைத் தேடுவதற்கு இஸ்லாம் எங்கு இருக்கின்றது என்பதை அறிவதற்கு அந்தப் பாதையிலே செல்வதற்கு அந்த வாகனத்தைச் செலுத்துவதற்கான ஒரு உத்தரவுப் பத்திரமா? என்பதை நாங்கள் தயவு செய்து சிந்திக்க வேண்டும்.

**அன்று புரியாதவை இன்று புரிகின்றன!**

இன்று உலமாக்களுக்கு மத்தியில் உபதேசம் செய்கின்ற எந்தவிதமான அருகதையும் எனக்கில்லை. இருந்த போதிலும்கூட ஒரு சகோதரனாக



நின்று பேசிக்கொண்டிருக்கின்றேன். நானொரு உலமா அல்ல என்று உங்களுக்குத் தெரியும். அறபு மொழி எனக்கும் தெரியாது. ஆனால், எனக்கு இப்போது வயது ஐம்பது. தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் குறைந்தது பத்துத் தடவையாவது நான் திருக்குர்ஆனை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையும் பல தடவைகள் படித்திருக்கின்றேன். மிகவும் ஆழமாகக் கோடுகளைக் கீறிக் கீறி நான் வாசித்திருக்கின்றேன். என்னிடம் எத்தனையோ தப்ஸீர்கள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் உங்களில் சிலர் ஆச்சரியப்படுவீர்கள், கோபமடைவீர்கள். பல நிறங்களிலும் வட்டங்கள் போட்டும் கோடுகளைக் கீறியும், கேள்விக் குறிகளைப் போட்டும் நிறைய வாசித்திருக்கின்றேன். "ஹதீஸ்" கிரந்தங்கள் என்னிடம் நிறைய இருக்கின்றன. "ஸஹீஹுல் புஹாரி" ஒன்பது பாகங்கள் என்னிடம் இருக்கின்றது, "ஸஹீஹுல் முஸ்லிம்" என்னிடம் இருக்கின்றது. "அபூதாவூத்" என்னிடம் இருக்கின்றது. இவ்வாறு நிறைய கிரந்தங்கள் என்னிடம் இருக்கின்றன. இவைகளை ஒவ்வொரு நாளும்தான் படித்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பு விளங்காத விசயங்கள் இப்போது விளங்குவதற்குத் துவங்குகின்றன. இதுதான் நான் சொல்ல வருகின்ற விசயம்.

**முடியாத ஒரு தேடல்!**

அன்புள்ள சகோதரர்களே! 25 ஆண்டுகளுக்கு முன்பு "தினகரன்" பத்திரிகையிலே நோன்பு காலத்திலே "றமழான் சிந்தனை" என்ற தொடர்ச்சியான கட்டுரைகளை எழுதியிருக்கின்றேன். "புத்தம் புதிய மலர்கள்" என்ற தலைப்பிலே கட்டுரைகளை எழுதியிருக்கின்றேன். "தினபதி" பத்திரிகையிலே தொடர்ச்சியாக "புனித றமழான் சிந்தனைகள்" என்பதை ஆரம்பித்து வைத்தது என்னுடைய கட்டுரைகள் மூலம்தான். 25 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய விசயங்கள் எனக்குத் தோன்றிய விதம் 25 ஆண்டுகளுக்குப் பின்பு தோன்றுவது வேறுவிதமாக இருக்கிறது. அனுபவம், ஆளுமை, நாங்கள் புரிந்து கொள்ளுகின்ற அணுகுமுறை எல்லாம் சிந்தனைகளிலே மாற்றங்களைக் கொண்டுவரும்.

21ம் நூற்றாண்டில் நாங்கள் எதிர்நோக்கப் போகின்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாத சூழ்நிலை உலமாக்களுக்கு வரப்போகின்றது என்றால், அதற்கான ஒரேயொரு காரணம் நாங்கள் எதைப்பற்றியும் இனிமேலும் ஆராயமாட்டோம், இத்துடன் தேடல் முடிந்து விட்டது, இதுதான் எங்களுடைய திட்டவட்டமான முடிவு எனும் எமது நிலைப்பாடுகளே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது! நாங்கள் திறந்த மனத்தோடு

இருந்தால், விசயங்களைப் படிப்பதற்குத் தயாராகவிருந்தால், மற்றவர்கள் சொல்வதைக் கேட்பதற்கு நாங்கள் தயாராகவிருந்தால், காழ்ப்புணர்வுகள் எங்களுக்கு மத்தியில் வராமல் இருக்குமாக இருந்தால், நிச்சயமாக 21ம் நூற்றாண்டின் சவால்களுக்கு எங்களால் பதிலைக் கொடுக்க முடியும். எவ்வித அச்சமும் எம்மை வந்தடைய முடியாது!

**அறிவும் அருளும்!**

21ம் நூற்றாண்டின் சவால்களுக்கு தேடலுள்ள நாம் நிச்சயமாக "இன்ஷா அல்லாஹ்!" முகங்கொடுக்கக் கூடியதாக இருக்கும். 21ம் நூற்றாண்டின் சவால்கள் என்று நாங்கள் சொல்லுகின்ற போது இன்றைய தினத்திலும் நாளைய தினத்திலும் இருந்து பேசிவிட்டு நாங்கள் பட்டியல் போடுவதற்காக இங்குவரவில்லை. 21ம் நூற்றாண்டின் சவால்கள் இவைகள்தான் என்று பட்டியல் போட்டுவிட்டு வீட்டுக்குப் போய்விட்டு அந்த சாவால்களை எவ்வாறு நோக்கப் போகின்றோம் என்பதல்ல. நாங்கள் கற்பனை பண்ண முடியாத சவால்கள் எங்களை சூழலாம், அந்த சாவால்களுக்கு எங்களை நாங்கள் தயார்படுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அதற்குரிய ஒரேயொரு வழி நாம் இன்னும் படிப்பதற்கும் அறிவதற்கும் தயாராக வேண்டும். அறிவுக்கப்பாலும் இன்னும் நிறைய விடயங்களை அல்லாஹ்வுத்தஆலா நமக்குப் பரிசாக அருளவேண்டுமென்ற அந்த எண்ணம், அந்த மனப்பாங்கு உலமாக்களுக்கு மத்தியிலே ஏற்பட வேண்டியது அத்தியவசியம் என்று உணருகின்றேன்.

**நிலா நிலா ஓடி வா!**

அன்புக்குரிய சகோதரர்களே! அருமை உலமாப் பெருமக்களே! ஒரு காலத்தில் எனது தாய் எனது தங்கையை இரவுகளில் கையிலே ஏந்திக்கொண்டு கையிலே ஒரு கண்ணாடியை வைத்துக் கொண்டு, வானத்திலே இருக்கின்ற நிலவை கையிலே இருக்கும் கண்ணாடியில் பிடித்து எனது தாய் எனது தங்கையிடம் காட்டுகின்ற ஒரு காலம் இருந்தது. "நிலா நிலா வா! வா! நில்லாமல் ஓடி வா!" என்று பாடிய பாடல்கள் இருக்கின்றன. இன்று அவைகள் எல்லாம் மாறிவிட்டன. இன்று செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதன் போய்க் கொண்டிருக்கின்றான். சூரியனைப் பற்றி நாங்கள் படிக்கின்றோம். அல்லாஹ்வுத்தஆலா குர்ஆனிலே சூரியனைப் பற்றிச் சொல்லுகின்றான். ஆனால் உலகத்தில் ஒரு சூரியன் மாத்திரமல்ல நாங்கள் பார்க்கின்ற ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன்தான். விஞ்ஞானிகளுடைய கூற்று அதுதான். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு



சூரியன். எனவே பலகோடி பலகோடி சூரியன்கள் இருக்கின்றன; இவைகளைப்பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும்.

அன்புக்குரிய சகோதரர்களே! அல்லாஹ்வுத்தஆலா குர்ஆனிலே சொல்லுகின்றான்; "இந்தக் குர்ஆனுக்கு விளக்கம் எழுதத் தொடங்கினால், இந்த உலகத்திலே இருக்கின்ற மரங்கள் எல்லாம் பேனைகளாகி அந்த மரங்கள் முழுவதுமே தேய்ந்தே விடும்" குர்ஆனுக்கு விளக்கம் எழுதி முடிய மாட்டாது. இந்த உலகத்திலே இருக்கின்ற நீர்வளம், கடல், சமுத்திரங்கள் அத்தனையும் ஒன்று திரட்டி மையாக எழுதத் தொடங்கினால், அத்தனையும் வற்றிவிடும்; முடிந்து விடும். ஆனால் குர்ஆனின் விளக்கம் முடிந்து விடாது என்று அல்லாஹ்வுத்தஆலா சொல்லியிருக்கின்ற போது, புதுப்புதுப் பிரச்சினைகள் வருகின்ற போது ஏன் நாங்கள் முடிந்த முடிவு என்ற அடிப்படையில் அந்த விசயங்களை அணுகுகின்றோம்? என்ற கேள்வியை மாத்திரம் உங்களுக்கு மத்தியில் மிகவும் தயவுடன் எழுப்ப விரும்புகின்றேன்.

அல்லாஹ்வுத்தஆலாவே குர்ஆனிலே சொல்லுகின்றான். இதன் "மானா"வுக்கு இதன் அர்த்தங்களுக்கு முடிவே இல்லை, எல்லைகளே இல்லை என்று. அவ்வாறு இருக்கும் போது நாம் மாத்திரம் எதற்காக அதற்கு எல்லைகளைப் போட்டுக்கொண்டு இருக்கின்றோம்? தயவுசெய்து சிந்திக்க வேண்டும். "யஹ்யா உலுமுத்தீன்" போன்ற கிரந்தங்கள் இருக்கின்றன, அரபு இலக்கியங்கள் இருக்கின்றன. 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இலக்கியங்கள் இருக்கின்றன. 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட வைத்திய நூல்கள் இன்றைய வைத்திய உலகத்திலே, வைத்திய உலகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வழிகாட்ட உதவுகின்றனவேயொழிய 300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அந்த நூல்களில உள்ள பல மருந்துகள் இப்போது வழக்கற்றுப் போய்விட்டன. அந்த நூல்களில் உள்ள கருத்துக்கள் முற்று முழுமையானவையுமல்ல.

அன்புக்குரிய சகோதரர்களே! 1400 ஆண்டுகளுக்கு முன்பு அல்லாஹ்வுத்தஆலா குர்ஆனை எங்களுக்குத் தந்திருக்கின்றான். அந்தக் குர்ஆனில் கூட சொல்லப்பட்ட விடயங்கள் எங்களுக்கு விளங்கிய விடயங்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களுக்குத் சொல்லித்தந்த விடயங்கள் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத் தாபியீன்கள் எல்லோரும் எங்களுக்கு வழி வழியாகச் சொல்லித்தந்த விசயங்கள் இருந்த போதிலும் கூட அவற்றுக்கு அப்பாலும் அர்த்தங்கள் இருக்கின்றன. இன்னுமின்னும் எழுதப்பட வேண்டிய அர்த்தங்கள் ஏராளமானவை இருக்கின்றன.

அவைகளைத் தேடுவதற்கு நாம் தயாராக வேண்டும். அந்தத் தேடலுக்கான மனநிலை எங்களுக்குள் இருந்தால் மாத்திரம்தான் எங்களால் வெற்றி பெற முடியும். அல்லது நாம் தோல்வியடைந்து விடுவோம்.

இன்று நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. இது உலமாக்களுடைய பிரச்சினை மாத்திரமல்ல. முஸ்லிம் சமுதாயத்தின் பிரச்சினையும்கூட. முஸ்லிம் சமுதாயம் ஒற்றுமைப்படுவதில்லை. ஒன்றை மாத்திரம் இங்கு சொல்ல விரும்புகின்றேன். நாங்கள் எல்லா இடங்களிலும் "வஅத்தஸிமூ பிஹப்லில்லாஹி ஜமீஅன் வலாத்தபர்ரகூ" "வலாத்தபர்ரகூ வலாத்தபர்ரகூ" என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த சமுதாயம் 1400 ஆண்டுகளாக ஒற்றுமைப்படவில்லை. இதுதான் உண்மை. இந்த விசயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற அடிப்படையில் சில அனுபவங்கள் எனக்குள் இருக்கின்றன. இந்த ஆயத்துக்கு என்னுடைய விளக்கம் என்னவென்றால் ஒற்றுமைப் படுங்கள் என்பதல்ல; பிரிந்து விடாதீர்கள் என்பதுதான் என்னுடைய விளக்கமாகும். "வலாத்தபர்ரகூ வலாத்தபர்ரகூ" என்று அல்லாஹ் சொல்லுகின்றான். பிரிந்து விடாதீர்கள் என்பதில்தான் அழுத்தம் இருக்கின்றது ஏன்? அதற்குத் தரப்பட்ட உதாரணத்தைப் பாருங்கள். அல்லாஹ்வுடைய கயிறு "பிஹப்லில்லாஹி" அல்லாஹ்வுடைய கயிறு அந்தக் கயிற்றைப் பற்றிப் பிடிப்பது எப்படி என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். ஒரு கயிற்றை ஒரே இடத்தில் எல்லோரும் பிடித்துக் கொண்டிருக்க முடியாது! அல்லாஹ்வுத்தஆலா உதாரணங்களை வீணுக்காகச் சொல்வதில்லை. மிகவும் அழகான உதாரணம்.

கரையோரப் பிரதேசங்களிலே இருக்கின்றவர்கள், மீன்பிடிக்கின்ற இடங்களுக்குப் போகின்றவர்கள் அதைப் பார்த்திருக்கலாம். கடலிலே இரவு போன அந்தத் தோணி கரைக்கு வரவேண்டுமென்றால், கயிற்றாலே கரையிலே நின்று அத்தோணியை இழுப்பார்கள். இழுக்கின்ற போது மாத்திரம்தான் கயிற்றைப் பிடிக்கின்ற நிலை ஏற்படுகின்றது. அந்தக் கயிற்றை எல்லோரும் ஒரே இடத்தில் பிடிக்க முடியாது! ஆயிரம் பேர் இருந்தால் ஆயிரம் இடங்களில்தான் அந்தக் கைகள் இருக்கப் போகின்றன. இதை நாங்கள் மறந்து விடக்கூடாது. ஒற்றுமை என்று சொல்லுகின்ற போது அந்த ஆயிரம் இடங்களிலும் இருக்கின்ற கை ஒரே கைதான் என்று பார்க்கக்கூடிய பார்வையும் விசாலமும் எங்களுக்குள் ஏற்பட வேண்டும். இன்று வந்துள்ள பிரச்சினை என்னவென்றால் என்னுடைய கை இருக்கின்ற இடம் மாத்திரம்தான் சரி, உன்னுடைய கையிருக்கின்ற இடம் பிழை. ஆகவே உன்னுடைய கையை வெட்டித்தறிக்க வேண்டுமென்ற என்ற நிலைக்கு



நாங்கள் வந்திருக்கின்றோம். அல்லாஹ்வுத்தஆலா தந்திருக்கின்ற அந்த உதாரணத்தைப் பாருங்கள் "பிஹப்லில்லாஹ்" அல்லாஹ்வுடைய கயிறு என்று சொல்லுகின்றான்.

## நிராகரிக்கப்பட்ட பிரார்த்தனை!

அன்புக்குரிய சகோதரர்களே! இந்த கூட்டத்திற்கு பிரதம அதிதியாக வந்திருக்கின்றேன் என்பதற்காக, ஒரு அமைச்சர் என்பதற்காக நீங்கள் மரியாதை செலுத்த வேண்டிய அவசியமில்லை. நீங்களெல்லாம் மிம்பர்களிலே இருந்து குத்பாக்களை ஓதுகின்ற போது உங்களுடைய காலடிக்குக் கீழிருந்து காது தாழ்த்திக் குத்பாக்களைக் கேட்கின்றவர்களில் ஒருவன்தான் இன்று உங்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய பேச்சிலே எங்காவது ஒரு பிழையிருந்தால் தயவுசெய்து எழுந்து நின்று குறுக்கிடுகின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது. நான் உங்களிடம் கேட்பதெல்லாம் ஒன்றுதான் அல்லாஹ்வுத்தஆலா "ஹதீஸ் குதுஸி" லே சொல்லுகின்றான் பெருமானார் (ஸல்) அவர்கள் சென்று அல்லாவிடம் மூன்று விதமான துஆக்களைக் கேட்கின்றார்கள் (ஹதீஸ் குதுஸ்). "ஷஹீஉ ஸித்தா" விலே பல கிரந்தங்களிலே சொல்லப்பட்ட விஷயம் "யா அல்லாஹ் என்னுடைய உம்மத்துக்களுக்கு நோய் ஒன்று வந்து அந்த நோயினால் அந்த உம்மத்துக்கள் ஒரே தடவையில் அழிந்து விடக்கூடாது" என்று துஆக் கேட்ட போது அல்லாஹ்வுத்தஆலா அந்த துஆவைக் கபூல் செய்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்கின்றார்கள் "யா அல்லாஹ் எதிரிகள் வந்து நாலா பாகங்களிலும் சூழ்ந்து என்னுடைய சமுதாயத்தை ஒரே தடவையிலே அழித்துவிடக்கூடாது" அல்லாஹ்வுத்தஆலா கபூல் செய்தான். மூன்றாவதாக கேட்டார்கள் றசூலே கரீம் (ஸல்) அவர்கள் என்னுடைய "உம்மத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் யாஅல்லாஹ்" என்று கேட்டதற்கு அல்லாஹ்வுத்தஆலா முடியாது என்று சொல்லிவிட்டான். இதுதான் உண்மை; இதுதான் சத்தியம்; இதன் இரகசியங்கள் என்ன? எவை? என்பதை புரிந்து கொள்ளக் கூடிய சக்தி எங்களுக்கு இல்லை.

## பூரண ஒற்றுமை எனும் கானல் நீர்!

ஆகவே அன்புக்குரிய சகோதரர்களே! நாம் கானல் நீரை தேடுகின்ற ஒரு சமுதாயமாக இருக்கக் கூடாது! இருக்கின்ற பலத்தை வைத்துக் கொண்டு எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டும். எல்லோரும் சரியான ஒரு கருத்துக்கு வர வேண்டும் என்று நாங்கள் எண்ணினால் எங்களை நாங்கள் ஏமாற்றிக்

கொள்ளப் போகின்றோம். நூறு வீதமானவர்கள் ஒற்றுமைப் படப்போவதில்லை. நூறு வீதமான ஒற்றுமையை நாங்கள் எந்த விடயத்திலும் ஏற்படுத்த முடியாது! பொதுவான ஒரு அபிப்பிராயம் வந்து விட்டால் அல்ஹம்துலில்லாஹ்! அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு, நாங்கள் நடைமுறையிலே இறங்கவேண்டுமேயொழிய எல்லோருமே ஏற்றுவரவேண்டும் என்று எண்ணத் துவங்கினோம் என்றால் ஒரு விசயமும் உருப்படியாகமாட்டாது. ஒரு ஊரிலே 12 மௌலவிமார்கள் இருப்பார்கள். அதில் ஒன்பது மௌலவிமார்களுக்கு மத்தியில் உடந்தை ஏற்பட்டுவிட்டால் "அல்ஹம்துலில்லாஹ்!" செய்ய வேண்டியதுதான். மூன்று மௌலவிமார்கள் கருத்துக்களோடு ஒத்து வருகின்றார்கள் இல்லை என்பதுக்காக நல்ல விசயங்களை நாங்கள் செய்ய முடியாமல் இருக்க முடியாது! ஆகவேதான் ஒன்றை சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் மன்னிக்க வேண்டும் இதை சொல்வதற்காக "இஹ்தினஸ்ஸிறாத்தல் முஸ்தகீம்" என்று நாங்கள் ஓதுகின்ற போது, உலமாக்கள் அதை ஓதக்கூடாது என்று அல்லாஹ்வுத்தஆலா எங்களுக்குச் சொல்லி வைக்கவில்லை. இங்கு வந்திருக்கின்ற பிரச்சினை இதுதான் இஹ்தினஸ்ஸிறாத்தல் என்று சொல்லுகின்ற போது உலமாக்கள் என்பதற்காக நேர்வழியிலேயேதான் நாங்கள் இருக்கின்றோம் என்ற அந்த உத்தரவாதத்தை யாரும் தரமுடியாது! யார் நேர் வழியில் இருக்கின்றார்; யார் நேர் வழியில் இல்லை என்பதை அவன்தான் தீர்மானிக்க வேண்டும்.

"மன்தஸாஅ வமன்தஸாஅ" அல்லாஹ் அடிக்கடி சொல்லுகின்றான் நான் நாடியவர்களை நான் குர்ஆனைக் கொண்டு நேர் வழியில் நடத்துவேன். நான் நாடியவர்களை இதே குர்ஆனைக் கொண்டு பிழையான வழியில் நடத்துவேன் என்று அல்லாஹ்வுத்தஆலாவே சொல்லிக் கொண்டிருக்கின்ற படியினால்தான் "தவ்பா" பாவமன்னிப்பு விடயத்திலும் சரி, நேர்வழி எனும் விடயத்திலும் சரி உலமாக்களுக்கும், உலமாக்கள் இல்லாதவர்களுக்கு மிடையில் எந்த வித்தியாசமும் இல்லை. உலமா என்று சொல்லுகின்ற ஒருவரே நேர் வழியில் இல்லாமல் இருக்கலாம். அல்லாஹ்வுத்தஆலா என்னை மன்னிக்க வேண்டும்! அல்லாஹ்வுத்தஆலா எங்கள் எல்லோருக்குக்கும் நேர் வழியைக் காட்ட வேண்டும். இந்த விடயங்கள் மிகவும் அடிப்படையான விடயங்கள். இந்த விடயங்களை நாம் இன்னும் மனதுக்குள் வைத்துக் கொண்டு வெளியே பேசாமல் இருந்ததாலேயே நமக்கு இந்த அவலநிலை ஏற்பட்டது.



## எந்தப் பொந்துக்குள் எந்தப் பாம்பிருக்கின்றது?

அன்புக்குரிய சகோதரர்களே! ஒரு விசயத்தை உங்களிடம் பேசப்போகின்றேன். நீங்கள் தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். உங்களுக்குத் தெரியும் நூல்கள் வெளியிடப்படுகின்ற போது என்னிடம் வந்து முன்னுரைகள் கேட்பார்கள். அண்மையிலே இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு சகோதரர் யாருடைய பெயர்களையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் இது சத்தியம், அல்லாஹ் மீது சத்தியம். என்னிடம் வந்து சொன்னார் "ஒரு மௌலவி ஒரு நூல் எழுதியிருக்கின்றார். ஒரு பெரிய நூல் கிட்டத்தட்ட 200 பக்கங்கள் டைப் பண்ணப்பட்ட ஒரு நூல். இந்த நூலுக்கு ஒரு முன்னுரை எழுதித் தாருங்கள்" என்று கேட்டார். நான் மிகவும் வேலைப்பளுக்களுக்கு மத்தியில் இருந்தேன்; நேரம் இருக்கவில்லை. நூலுக்கு முன்னுரை என்று சொல்லும் போது எழுதாமல் இருக்க முடியுமா? மூன்று நான்கு மாதங்கள் முடிந்ததற்குப் பின்னர் ஒரு நாள் என்னுடைய எல்லா வேலைகளையும் வைத்துவிட்டுப் காலிக்குப் போனேன்; இந்தப் புத்தகத்தை வாசிப்பதற்காக மாத்திரம். அமர்ந்து வாசிக்கத் துவங்கினால் என்னால் 20, 25 பக்கங்களுக்கு மேல் வாசிக்க முடியவில்லை. வாசிக்கவே முடியாது! அவ்வளவு குழப்பம்; அந்த 25 பக்கங்களுக்குள் நிறையக் குழப்பம் இருந்தது. அந்த நூல் சில வேளை என்னுடைய வீட்டிலே கிடக்கலாம்; அதை காட்டவேண்டிய அவசியமுமில்லை. அந்த நூலை அவ்வாறே வைத்துவிட்டு இரண்டு நாட்களுக்குப் பின்பு இந்த நூலுக்கு முன்னுரை எழுதித்தரச் சொல்லிக் கேட்டுவந்தாரே அந்தச் சகோதரரை அழைத்தேன். வாருங்கள் உங்களுடன் பேசவேண்டும் என்று; "இந்த நூலிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையிலே எனக்கு இந்த அனுபவம் ஏற்படவில்லை. இந்த நூலை என்னால் வாசிக்க முடியாமல் இருக்கின்றது. ஏதோ ஒரு பிரச்சினை இருக்கின்றது. அவர் அல்லாஹ், றசூல், குர்ஆன் என்றெல்லாம்தான் எழுதியிருக்கிறார். எனினும் ஏதோ ஒரு பிரச்சினை இருக்கின்றது" என்று நான் சொன்ன போது அந்த நூலைக் கொண்டு வந்து தந்த சகோதரருடைய கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாகச் வடியத் தொடங்கியது. அவர் சொன்னார் "சேர் எப்படி இதனைக் கண்டு பிடித்தீர்கள்?. "என்ன என்று கேட்டேன்?" "இந்த மௌலவிக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இல்லை" என்று சொன்னார். என்னை மன்னிக்க வேண்டும். அந்த மௌலவி பள்ளிவாசலிலே குத்பா ஓதிக் கொண்டிருக்கின்றார், தொழுவித்துக் கொண்டிருக்கின்றார்; அவர் சொல்லியிருக்கின்றார் அல்லாஹ்வை நான் நம்பவில்லை. ஆனால் என்ன செய்வது, வாழ்க்கைச் செலவுகளுக்கு வேறு வழியில்லை, ஒரு தொழிலாகக் கருதி பள்ளிவாசலில் தொழுவித்துக் கொண்டிருக்கின்றேன் என்று அந்த

மௌலவி கூறியுள்ளார். இது நடந்த விடயம். இதற்கு அல்லாஹ்தான் சாட்சி. நான் சொல்ல வருவதெல்லாம் நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் எந்தெந்தப் பொந்துக்குள் எந்தெந்தப் பாம்பு இருக்கின்றது என்று எங்களுக்குத் தெரியாது! அல்லாஹ்வுடைய வழிகாட்டுதலால் 25 பக்கங்களுக்கு மேல் என்னால் வாசிக்க முடியவில்லை. ஏதோ ஒரு குழப்பம் இருந்தது. ஆனால் அந்தக் குழப்பத்தைப் பார்க்கின்ற போது இந்த அனுபவம் எனக்கு நிறைய இருக்கின்றது. சகோதரர் ஹசன் அலி அவர்கள் இருக்கின்றார்கள். நான் அமைச்சராகவிருந்து இதுவரையில் 20,000க்கும் மேற்பட்ட கடிதங்களுக்கு மேல் கையொப்பமிட்டிருப்பேன். 20,000 கடிதங்களையும் வாசிக்க முடியாது! ஆனால், கடிதங்களை கையொப்பம் போட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென ஒரு கடிதத்தை எடுக்கச் சொல்லி மனம் சொல்லும். எடுத்துப் பார்த்தால் அதில் ஏதாவதொரு குழப்பம் இருக்கும். அந்த வழிகாட்டல் எப்போதும் எனக்கு இருந்து வந்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

**உலமாக்கள் கூலிப்படையல்ல!**

ஆகவேதான் அன்புக்குரிய சகோதரர்களே! இங்கு சொல்ல வருகின்ற விசயமெல்லாம் நாங்கள் நிறையச் செய்ய வேண்டியிருக்கின்றது என்பதைத்தான். எல்லோரையும் நாம் ஒற்றுமைப்படுத்த முடியாது! ஏனென்றால் நாங்கள் 21ம் நூற்றாண்டில் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கின்ற போது. 21ம் நூற்றாண்டில் இலங்கையில் உலமாக்கள் என்ன சவால்களைச் சந்திக்க போகின்றார்கள் என்ற கேள்வியை எழுப்புகின்ற போது எங்களைப் பாவிக்க வருவார்கள். எங்களை உடைப்பார்கள், எங்களைத் துண்டு துண்டுகளாக மாற்றுவார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏஜெண்டுகளாகச் சிலரை எடுப்பார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏஜெண்டுகளாகச் சிலரை எடுப்பார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குக் கூட சிலரை ஏஜெண்டுகளாக எடுக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியம் ஏற்படலாம். ஆனால் நாங்கள் உலமாக்கள் அல்லாஹ்வுக்கு மாத்திரம் ஏஜெண்டுகளாக இருக்க வேண்டும். அவனுடைய தூதர் றசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்!**

அன்பான சகோதரர்களே! ஒரு ஊருக்குப் போன போது அந்தக் குத்பாவை விட்டு வெளியேற வேண்டுமென்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அந்த ஊரிலே ஒரு பிரச்சினை, இரண்டு பேருக்குள்ளே ஒரு பிரச்சினை. இரண்டு பணக்காரர்களுக்குள்ளே இருக்கின்ற பிரச்சினை, அப்பிரச்சினையை அந்தக் குத்பாவிலே பார்க்கக்கூடியதாகவிருந்தது, இதுதான் இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை. உங்களுடைய கால்களில் விழுந்து நான் கேட்கின்றேன். உங்களுடைய ஒவ்வொருவருடைய கால்களையும் எனது தலையின் மீது வைத்துக் கேட்கின்றேன் தயவு செய்து குத்பாக்களிலே பிரச்சினையான விடயங்களைப் பேசாதீர்கள். இரண்டு மௌலவிமார் வேறுபடுகின்ற விசயங்களை பொதுமக்களிடையே பேசாதீர்கள். ஒரு ஊரிலே பத்து மௌலவிமார்கள் இருந்தால் பத்துப் பேரும் கூடி ஒரு முடிவுக்கு வாருங்கள். உலமாக்கள் படித்தவர்கள். மக்களை வழிகாட்ட வேண்டியவர்கள். "அப்துல் றஸாக்" என்ற மௌலவிக்கு ஒரு கருத்து. "அப்துல் பாரி" என்ற மௌலவிக்கு ஒரு கருத்து மக்கள் குழறுபடிப்படுகின்றார்கள். மக்களுக்கு எது சரி எது பிழை என்று தெரியாத நிலையிலே மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவேதான் உலமாக்களுக்கு மத்தியிலே "ஜம்மியத்துல் உலமா" விற்கு பெரியதொரு பங்களிப்பு இருக்கின்றது. ஜம்மியத்துல் உலமா என்பது தீர்ப்பளிக்கும் சுப்ரீம் கோர்ட் அல்ல. தயவுசெய்து ஒரு மனிதனைப் பார்த்து "முர்தத்" என்று சொல்ல அவசரப்படாதீர்கள். இது எங்களுடைய பிரச்சினையல்ல. நாங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்தவர்களாக இருக்க வேண்டும். அவனுடைய கண்மணி றசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டவர்களாக இருந்தால்தான் ஒழிய, எங்களுக்குள் 21ம் நூற்றாண்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணவோ அவற்றுக்கு முகங்கொடுக்கவோ முடியாது.

அன்புக்குரிய சகோதரர்களே! இன்று எதைப் பார்த்தாலும் சரிதான் எந்தவொரு சின்ன விசயத்தை எடுத்துக் கொண்டாலும் சரிதான் நாங்கள் தீர்ப்பு வழங்க அவசரப்படுகின்றோம். இந்த நிலை மாறவேண்டும். இங்கே வீடியோ எடுக்கின்றார்கள் வீடியோ எடுப்பது "ஷிர்க்" என்று நாங்கள் சொல்ல முடியாது! அவர்களுக்கு "ஷிர்க்" என்றால் என்னவென்று தெரியாது! போட்டோ எடுக்கலாமா? "ஷிர்க்" என்று சொல்லுகின்றவர்கள் இருக்கின்றார்கள். ஹறாமுக்கும், ஷிர்க்குக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் இருக்கின்றார்கள். "ஹறாம்" என்பது வேறு "ஷிர்க்" என்பது வேறு. எடுத்ததற்கெல்லாம் ஹறாம் என்று தீர்ப்புக் கூறுகின்ற விடயத்தில் நாம் அவசரப்படக் கூடாது. ஒரு விடயத்தை "ஷிர்க்" எனத் தீர்ப்பளிப்பது மிகவும் பெரியதொரு பொறுப்பாகும். ஆழம் தெரியாமல் காலை நாம் விட்டுவிடக் கூடாது. ஒவ்வொரு செயலும் எண்ணங்களை கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு தனி மனிதனின் உள் எண்ணங்களை இறைவன்

மாத்திரமே அறிவான். அந்த எண்ணங்கள் இவைதான் என நாம் வலிந்துரைக்கவும் கூடாது. இயன்றவரை தீர்ப்புக் கூறாமல் ஞானத்தை உபயோகித்து - அன்பினால் வழி தவறக்கூடியவர்களை அல்லாஹ்வின் உதவியால் நெறிப்படுத்த வேண்டியது உலமாக்களின் கடமையாகும். அல்லாஹ்வின் அளவற்ற கருணையின் வெளிப்பாடு 21ம் நூற்றாண்டு.

19ம் நூற்றாண்டில், 20ம் நூற்றாண்டில் அல்லாஹ்வுத்தஆலாவுடைய கோபத்தைப் பற்றி மாத்திரம்தான் அதிகமாக நாங்கள் பேசி வந்திருக்கின்றோம். அல்லாஹ்வுடைய கருணையைப் பற்றி இந்த மக்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். இந்த மனித குலம் இன்று இரத்தம் வடித்துக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வுடைய கோபத்தை பற்றி அவன் தண்டிப்பான், நரகத்திலே போடுவான் என்று மட்டுமன்றி, அவனுடைய கருணை பற்றியும் கற்றுக் கொடுங்கள். என்ற "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்" என்று சொல்லுகின்றோம். அவை பற்றியும் ஆழமாகப் பேசுவோம். பிஸ்மில்லாஹி ஜப்பார் அல்லது பிஸ்மில்லாஹி கஹ்றார். என்று சொல்லுகின்றோமா? கோபக்காரர் என்று சொல்லுகின்றோமா? கோபக்காரனின் பெயரிலே நான் ஓதுகிறேன் என்று சொல்லுகின்றோமா? இல்லை. "அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்" அந்த அல்லாஹ்வுடைய பெயரிலே ஓதுகின்றோம் என்று சொல்லுகின்ற நாங்கள், அந்த அல்லாஹ்வுடைய கருணையைப்பற்றி நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். இன்று இந்த நாட்டிலே சமாதானம் இல்லாமல் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. நாங்கள் பிறந்த இந்த நாட்டின் அரசியல் அமைப்பை எடுத்துப் பாருங்கள். இந்த நாட்டு அரசியலைப்பிலே இந்த நாட்டிலே பிறந்த ஒவ்வொரு பிரஜைக்கும் எங்கும் நடக்கின்ற உரிமை இருக்கின்றது. நம்முடைய மண்ணிலே நடக்கின்ற உரிமை இருக்கின்றது. உங்களுடைய எத்தனை பேரை கொழும்புக்கு வந்ததன் பிறகு எத்தனை இடங்களிலே நிறுத்தி இருப்பார்கள்? உங்களுடைய அடையாள அட்டையைத் தா என்று கேட்டிருப்பார்கள். ஏன் அந்த உரிமை இந்த நாட்டிலே மறுக்கப்படுகின்றது? யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஐ.தே.க. என்றாலும் சரிதான் ஸ்ரீ.ல.சு.கட்சி என்றாலும் சரிதான் எந்த நிருவாகம் இருந்தாலும் சரிதான் அவசரகாலத்தின் கீழ்தான் இந்த நாடு ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே சமாதானம் இல்லை. சமாதானத்தை எவ்வாறு நாம் ஏற்படுத்தப் போகின்றோம்? என்ற கேள்வி இருக்கின்றது. இந்த சமாதானத்தை எங்கு நாம் ஏற்படுத்தப் போகின்றோம். இஸ்லாம் என்று சொல்கின்றோம். இஸ்லாம் என்றால் சமாதானம். இஸ்லாம் என்று சொல்லுகின்ற உள்ளங்களுக்குள் இன்று சமாதானம் இல்லை.



சாந்தியில்லை. உலமாக்களுக்கு மத்தியிலே எத்தனை பேருடைய உள்ளங்களிலே சாந்தி இருக்கின்றது என்பதைக் கேட்டுப்பார்க்க வேண்டும்.

## ஸலாம் சமாதானத்தின் உத்தரவாதம்!

என்னுடைய கவிதை நூல் அண்மையிலே வெளியிடப்பட்டது "நான் எனும் நீ" என்ற நூல். பேராசிரியர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் அவ்விழாவுக்கு வந்த பொழுது ஒரு விசயத்தைச் சொன்னார் அதை எத்தி வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகின்றேன். ஒருவருடைய முகத்தைப் பார்த்து "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று சொன்னால் அதன் அர்த்தம் அவருக்கு நாம் ஒரு உத்தரவாதம் வழங்குகின்றோம். "என்னால் உனது சாந்திக்கு எந்தவிதமான கேடும் வரமாட்டாது இதுதான் விளக்கம். ஒருவரைப் பார்த்து "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று சொன்னால் என்னுடைய வாயினால், என்னுடைய சிந்தனையினால், என்னுடைய கையினால், என்னுடைய எந்த நடவடிக்கையினாலும் உனக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட மாட்டாது. நீ அமைதியாக இருக்கலாம். நீ சாந்தமாக இருக்கலாம் இதுதான் அர்த்தம் என்று சொன்னார்" "வஅலைக்குமுஸ்ஸலாம்!" நீங்கள் அந்த உறுதியை எனக்குத் தருகின்றீர்களா? அதே உறுதியை நானும் உங்களுக்கும் தருகிறேன் அதற்கு அல்லாஹ்வுத்தஆலா உதவ வேண்டும் இதுதான் அர்த்தம் என்றும் சொன்னார். இன்று என்ன நடைபெறுகின்றது? இரண்டு பேர் வருகின்றார்கள் "அஸ்ஸலாமு அலைக்கும்!" "வலைக்குமுஸ்ஸலாம்!" சொல்லி மறு கணமே அடிபிடி குத்பாவுக்கு வருகிறார்கள் மிம்பரிலே ஏறி குத்பா ஓதப்படுகின்றது. ஓதி முடிய பள்ளிவாசலுக்குள்ளே அடிபிடி. தொழுது முடிய அடிபிடி, இரத்த வெள்ளம். வக்பு சபை என்ற ஒரு சபை இந்த நாட்டில் இருக்கிறது. அல்லாஹ்வுடைய பெயரில் அந்த வக்பு சபையை இல்லாமல் செய்துவிட வேண்டும். 1956ல் தான் வக்பு சபை இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டது. இந்த நாட்டிலே முஸ்லிம் சமுதாயம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இருக்கின்றது. என்றைக்கு வக்பு சபை உருவாக்கப்பட்டதோ கோடும், கச்சேரியுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிவாசலில் விளக்கு வைக்க எண்ணெய் வாங்குவதற்குக் காசில்லை. இங்கே காரும் பிடித்துக்கொண்டு சட்டத்தரணிகளுக்கு காசு கொடுத்து வழக்காடும் இடமாக மாறிவிட்டது. வக்பு சபைகள் இல்லாமல் பள்ளிவாசல்களை அமைதித்தளங்களாக வைத்திருந்த காலத்துக்கு எம்மால் நகர முடியாதா?

**இணை வைப்பதா? இறைவனாகவே மாறுவதா? எது பெரிய கொடுமை?**

ஆகவேதான் அன்புக்குரிய சகோதரர்களே! நாங்கள் மிகவும் சீரியசான விசயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் ஷிர்குடைய விசயத்தைப் பற்றிச் பேசுகின்றோம். அதை விடவும் முக்கியமானதொரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அல்லாஹ்வின் சார்பில் பேசுகின்ற ஒரு கூட்டம் இன்று உருவாகியுள்ளது. இது ஷிர்க் இணை வைப்பதை விடவும் ஆபத்தான விடயமாகும். இன்று சில உலமாக்கள் அல்லாஹ்வுடைய சார்பிலே பேசக் கூடியவர்களாக வந்துவிட்டார்கள். அல்லாஹ்வுடைய சார்பிலே பேசுவதற்கு எங்களுக்கு அனுமதியில்லை. அல்லாவைப்பற்றிப் பேசவேண்டும். ஆனால் அவனுடைய சார்பிலே பேசக்கூடாது. உலமாக்கள் உட்பட எல்லோரும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க வேண்டும். நான் கடந்த வாரம் "ஹதீஸுல் குதூஸை" வாசித்துக் கொண்டிருந்தேன். மறுமையிலே அல்லாஹ்வுத்தஆலா இரண்டு பேரை அழைக்கின்றான். இரண்டு நண்பர்கள், ஒருவர் நன்றாக வணங்குபவர், நோன்பு நோற்பவர், சுன்னத்தான தாடி, தொப்பி, குல்லா, ஜுப்பா, தலைப்பாகை அனைத்தும் அணிபவர். மற்றவர் மிக மோசமானவர் அவர் தொழுவதில்லை, நோன்பு நோற்றபதுமில்லை, தீய செயல்கள் அத்தனையும் செய்யக் கூடியவர். முதலாமவர் சொல்லிச் சொல்லிப் பார்த்தார் இது ஹறாம், பாவம் என்றெல்லாம் சொல்லிய போதும் மற்றவர் கேட்கவில்லை. ஒருநாள் பொறுமையிழந்து அல்லாவின் மீது சத்தியமாகச் சொல்கின்றேன் அல்லாஹ் உன்னை மன்னிக்க மாட்டான்!" என்று கூறி விட்டார். மறுமையில் இறைவன் இருவரையும் அழைக்கின்றான். முதலாமவரைப் பாரத்து அல்லாஹ் கேட்கிறான் "என்னுடைய சார்பில் பேச உனக்கு யார் உரிமை தந்தது? நான் மன்னிக்க மாட்டேன் என்று சொல்வதற்கு நீ யார்? இப்படிக் கேட்டு மலக்குகளைக் கூப்பிட்டுச் சொல்கின்றார், எனது சார்பில் பேசினாரே இவரை நரகத்தில் போடுங்கள். மலக்குகள் அவரை நரகத்திற்குள் அழைத்துச் செல்லும் போது அல்லாஹ் அவரைப் பார்த்துக் கூறுகிறான். என்னுடைய கருணையைப் பார்! என்னுடைய அளவற்ற கருணையைப் பார்! யாரை நான் தண்டிப்பேன் என்று சொன்னாயோ அவரை நான் மன்னித்து சுவர்க்கம் அனுப்புகின்றேன் என்று அல்லாஹ் கூறுவான். ஆகவேதான் "ஷிர்க்" என்பது அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, அல்லாஹ்வுடைய சார்பிலே பேசுவதென்பது அல்லாஹ்வாகவே மாறுவதாகும். இங்குதான் வந்தது பிரச்சினை. என்ன ஷிர்க்கைப் பற்றிப் பேசுகின்றோம்? அரசியல் அதிகாரத்திற்கு நாங்கள் இன்னும் எங்களை வழிபட்டுக் கொண்டிருக்கவில்லையா? எங்களுடைய உள்ளங்களுக்குள் எத்தனை சிலைகளை நாம் வைத்துக் கொண்டிருக்கின்றோம்? இவைகளைப் பற்றி நாம் பேசுவதில்லை. எத்தனை இடங்களிலே ஸகாத்தைப் பற்றி நாம் பேசுகின்றோம்? ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்கள் சொன்னார்கள். ஒட்டகையைக்கட்டுகின்ற ஒரு துண்டுக் கயிறு என்று சொன்னாலும் சரிதான், அதை ஸகாத்துக்குக் கொடுக்க யாராவது மறுத்தால் அவனுக்கு எதிராக "ஜிஹாத்" செய்வேன். போராடுவேன் என்று சொல்லப்படுகிறது. இந்த நாட்டிலே இருக்கின்ற மனித சமுதாயத்திலே இருக்கின்ற பொருளாதார பிரச்சினைகளைப்பற்றி நாம் என்ன பேசுகின்றோம்? அல்லாஹ்வை நெருங்குகின்ற விஷயத்தில் நேற்றுக்கூட வாசித்தேன், எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும் போது எழுந்து, விழித்துநின்று அல்லாஹ்வுக்காக அஞ்சி கண்ணீர் விட்டு, தொழுகின்றார்களே அங்குதான் அல்லாஹ்வுடைய நெருக்கம் அதிகமாகின்றது. அல்லாஹ்வுத்தஆலா ஏழாவது வானத்திலிருந்து இறங்கி வருகின்றான். இறங்கி வந்து கேட்கின்றான். என்னிடம் கேட்பதற்கு ஆளில்லையா? தேவைகள் இல்லையா? என்று பிரகடனித்துக் கொண்டிருக்கின்றான்.

**எல்லா இமாம்களும் சரியானவர்களே!**

அன்புக்குரிய சகோதரர்களே! இங்கு கருத்து வேறுபாடுகள் பற்றியும் பேச வேண்டியுள்ளது. சகோதரர் புஹாரி மௌலவி அவர்கள் "உலமாக்களே ஒன்று படுங்கள்" என்ற அழகான புத்தகம்ஒன்றை எழுதியுள்ளார். அதில் சொல்லப்பட்ட விடயங்கள் இதுதான். நாங்கள் இன்றைக்கு எதுபிழை என்று சொல்கின்றோமே, அதில் ஷாபி மத்ஹபின் அடிப்படையில் பிழையாக இருக்கலாம் அவ்வளவுதான். அந்த விடயம் ஹனபி மத்ஹபின் அடிப்படையில் சரியாக இருக்குமா? இல்லையா? என்பது பற்றி யாரும் பேசுவதில்லை, சிந்திப்பதுமில்லை. ஹனபி இமாமுடைய கிதாபுகளை, இமாம் மாலிக் அவர்களுடைய நூல்களையும் யாரும் பார்ப்பதில்லை. ஹன்பலி இமாம் அவர்களுடைய பார்வையில் சரியாக இருக்குமா என்று யாரும் பார்ப்பதில்லை. ஆனால் கஃபதுல்லாஹ்வுக்கு போனால் ஷாபி எல்லோரும் எல்லாம் மாலிக்காகவோ ஹனபியாகவோ மாறி விடுவோம். இதிலொரு நயவஞ்சகத் தன்மை இல்லையா என்றொரு பிரச்சினை இருக்கின்றது. நாங்கள் ஒன்றை மறந்து விட்டோம். நான்கு இமாம்களும் சரியானவர்கள்தான். யாரும் எந்தவொரு இமாமும் பிழையென்று சொல்ல முடியாது. நான்கு இமாம்களும் சரியென்றால், அவன் எவ்விடத்தில் கையைக் கட்டினால் நமக்கென்ன, பொக்குழுக்கு மேலே கட்டினால் நமக்கென்ன? பொக்குழுக்குக் கீழ்க் கட்டினால் நமக்கென்ன? இதுதான் கேள்வி

இன்றைக்கு முஸ்லிம் சமுதாயம் இவ்வளவு வேறுபட்டு சண்டைபிடித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? விரலை இப்படி ஆட்டுவதா? அப்படி ஆட்டுவதா? இதனைப் பார்த்தா சுவர்க்கம் நரகம்? பாவமன்னிப்பு இல்லையா? இதனை விட முக்கிய விடயங்கள் இல்லையா? அடுத்த வீட்டிலே சாப்பிட முடியாமல் இருக்கின்றான் என்பதைப் பற்றி பிரச்சினை இல்லையா? கலியாணம் முடிக்க முடியாமல் எத்தனை குமர்கள் கஷ்டப்பட்டு பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். இதைப்பற்றிப் பேசுவதற்கு யாரும் இல்லையா? தக்பீர் கட்டுவது. விரல்களை ஆட்டுவது போன்ற பிரச்சினைகள் மாத்திரம்தானா நமது சமூகத்தில் எஞ்சியுள்ளன?

**மொழி வாளால் கூறுபடும் சமுதாயம்!**

ஆகவேதான் அன்புக்குரிய சகோதரர்களே! நாங்கள் புதிதாக சிந்திக்க வேண்டும். புதிய புதிய விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு தினகரனிலே ஒரு கட்டுரை எழுதினேன். அந்தக் கட்டுரை இன்று உண்மையாக மாறி இருக்கின்றது. The Danger of the Muslim Community becoming linguistically divided முஸ்லிம் சமுதாயம் மொழி ரீதியாக இரண்டாகும் அபாயம் என்று, 25 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்தேன். சிங்கள மொழியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள் ஒரு கூட்டம். தமிழ் மொழியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள் இன்னுமொரு கூட்டம். இப்போது சிங்கள மொழியில் படித்தவர்களுடைய பிள்ளைகளுக்கு தமிழ் மொழி தெரியாது! தமிழ் மொழி வாசிப்பதேயில்லை. தமிழிலே படித்த பிள்ளைகள் தமிழை வாசிப்பதும் இல்லை. நீங்கள் ஓதுகின்ற குத்பாக்களை எத்தனை விதமானோர் விளங்கிக் கொள்கின்றார்கள் என்பதை ஒரு ஆராய்ச்சி செய்து பாருங்கள். கொழும்பிலே விசேடமாக ஆராய்ச்சி செய்து பாருங்கள்! நீங்கள் ஓதுகின்ற குத்பாக்களில் 10 வீதமாவது அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இரவிலே வானொலியிலே 8.00 மணி முதல் 10.00 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் முஸ்லிம் நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. இதை எத்தனை வீதமானோர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்? பெரும்பான்மையினர் கேட்பதில்லை. ஆகவே பெரியதொரு பிச்சினை இருக்கின்றது. உலமாக்கள் சிங்கள மொழியிலே குத்பாக்கள் ஓதுவதற்கு வல்லமை அற்றவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய உலமாக்களை உருவாக்குவதற்கு இந்த சமுதாயம் தவறிவிட்டது. இன்று ஆங்கில மொழியிலே படித்து வருகின்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தமிழும் தெரியாது, சிங்களமும் தெரியாது! அறபு மத்ரஸாக்களிலே ஆங்கிலப் புலமை ஏற்பட வேண்டும். இன்றைக்கு



சங்கைக்குரிய அமைச்சர் அஸ்ஸெய்யித் அலவி மௌலானா அவர்கள் ஆங்கிலத்தில் அழகாகப் பேசினார்கள். இந்தப் பேச்சு இங்கு எத்தனை பேருக்கு விளங்கியிருக்குமென்று தெரியாது.

**உலமாக்களில் அறபு மொழிப் பாண்டித்தியம்!**

புஹாரி மௌலவி மன்னிக்க வேண்டும், இஸ்யாஸ் மௌலவி மன்னிக்க வேண்டும். இந்த வரவேற்புரை ஆற்றும் போது சொன்னேன். அறபு நாட்டு உயர் ஸ்தானிகர்கள் வந்திருக்கிறார்கள். 10 நிமிடம் அறபியில் பேசிவிட்டு தமிழில் பேசுங்கள் என்று. பேச முடியாது இதுதான் உண்மை. நான் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். இதை நான் குறைசொல்ல வில்லை. அவர்கள் கோபிக்க மாட்டார்கள். அண்மையில் நான் அம்பாறையில் இருக்கின்ற போது ஒரு மௌலவி சகோதரர் “தனக்கு துறைமுகத்தில் ஒரு தொழில் தருமாறு கேட்டார்! துறைமுகத்தில் மௌலவிமார்களுக்கும் தொழில் கொடுத்துத்தான் இருக்கிறோம். இதை நீங்களும் தெரிந்திருக்க வேண்டும். அந்த நேரம் குதூகலமான நல்ல மனநிலையில் இருந்தேன். அவரிடம் ஒரு பேப்பரைக் கொடுத்து தமிழில் சொல்லச் சொல்ல ஜனாதிபதிக்கு அறபியில் ஒரு கடிதம் எழுதித் தாருங்கள் என்று கேட்டேன். “சேர் அது கொஞ்சம் கஷ்டம் சேர்;” என்றார். அறபியிலே எழுதுவதும் பேசுவதும் இன்றைக்கு இந்த நாட்டிலே உள்ள பெரும்பாலான உலமாக்களுக்கு கஷ்டமாகவுள்ளது இதுதான் யதார்த்தம். இதை நாம் ஜீரணித்தாகவேண்டும். அறபு மொழிப் பாண்டித்தியம் உள்ள உலமாக்களை உருவாக்கியாக வேண்டும்.

**ஒரு முன்மாதிரி...**

ஆகவேதான், அன்புக்குரிய சகோதரர்களே! நான் இப்போது அறபு படிக்கத் துவங்கியுள்ளேன். இன்ஷா அல்லாஹ்! உங்களுடைய அடுத்த மகாநாட்டின் போது அறபு மொழியிலே உங்களுடன் பேசுவதற்கு இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் ஹயாத்துடன் வைத்தால் எனக்கு உதவ வேண்டும். பாராளுமன்றத்துக்கு அரசியலுக்கு வருகின்ற போது எனக்கு சிங்களம் தெரியாது. இன்றைக்கு உடைந்த சிங்களம் என்றாலும், உடைந்த சிங்களத்திலும் பேசத் தொடங்கியிருக்கின்றேன். பாராளுமன்றத்திலும் பேசத்தொடங்கியிருக்கின்றேன். இது மிகவும் முக்கியம்.

அன்புக்குரிய சகோதரர்களே! இன்று முஸ்லிம் சமுதாயம் இதுதான். நாங்கள் ஃபஅல, ஃபஅல, ஃபஅல்தும் என்றுதான் இன்னும் சொல்லிக் கொடுக்கின்றோமேயொழிய, நவீன மொழியில் அறபு மொழியை கற்பிக்கத் துவங்கவில்லை. தற்போது எகிப்து போய் அறபுக் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அட்டாளைச்சேனை ஸர்க்கியா மத்ரஸாவிலே அறபு கல்வி கற்பதற்கும் வித்தியாசம். எகிப்திலே கல்வி கற்கும் மாணவன் எடுத்தவுடனே இது புத்தகம், அது பாடசாலை என்று பேசுவதற்குப் பயிற்றுவிக்கப் படுகின்றான். எமது மத்ரஸாக்களில் இன்னும் கிளிப்பிள்ளைகள் போன்றே இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. மொழி வல்லமையை சிறு வயதிலேயே உருவாக்கக்கூடிய வகையில் அறபுக் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் இன்னுமே அமையவில்லை. எங்களுக்கு கல்முனையில் மூத்தம்பி ஆலிம் எனப்படும் மௌலவி நவீன முறையில் படிப்பித்தார். (இக்கட்டத்தில் அமைச்சரின் பேச்சை ஒரு மௌலவி சகோதரர் குறுக்கிடுகின்றார். தனக்குத் தெரிந்த இரண்டொரு மத்ரஸாக்களில் நவீன அறபு கற்பிக்கப்படுவதாகக் கூறுகின்றார். அந்த சகோதரருக்கு பதில் கூறிக்கொண்டே அமைச்சர் தொடர்கின்றார்.) இந்தப் பிரச்சினையை சபையில் எடுப்பதற்குக் காரணம் இருக்கிறது. ஒரு சில அறபுக் கல்லூரிகளில் நவீன முறையில் அறபு மொழியைக் கற்றுக் கொடுப்பதால் பெரும்பான்மைக் கல்லூரிகளிலுள்ள குறைபாட்டைத் தீர்க்க முடியாது. அறபு மொழிப் பாண்டித்தியமுள்ள உலமாக்களை உருவாக்க நாம் உரிய திட்டங்களை வகுத்தாக வேண்டும். உருவாக்கப்பட்ட உலமாக்களின் அறபு மொழி ஆளுமை வளர்ச்சி பற்றி இன்னும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அன்புள்ள சகோதரர்களே! ஒரு காலம் இருந்தது. புஹாரி மௌலவி போன்றோர் அவர் எனது பழைய கூட்டாளி, அவர் மத்ரஸாவுக்குப் போகின்ற போது இருந்தது ஆறு, ஏழு மத்ரஸாக்கள் மாத்திரமே. மஹரகம பஹ்ஜி, வெலிகம ஸரீக்கி, பலாஹ், ஆறும்தான் இருந்தது. இன்றைக்கு இந்நாட்டிலே எத்தனை அறபு மத்ரஸாக்கள் இருக்கின்றன. நூறுக்குக்கூட கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் இருக்கலாம். ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு அறபு மத்ரஸா. கல்முனைக் குடியில் மூன்று இருக்கிறது. சில ஊரிலே ஐந்து இருக்கிறன. சில ஊரிலே ஆறு இருக்கிறன. ஆகவேதான் இது ஒரு பாரதூரமான பிரச்சினை. ஒரு சிலர் எமது சமுதாயத்திற்கு சாப்பாடு இல்லை. சமுதாயம் வறுமையுடன் பட்டினியுடன் கிடக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிற போது, இல்ல சேர் அவர்ர வீட்ட சாப்பாடு இருக்கின்றது புரியாணி சாப்பாடு இருக்கின்றது சாப்பிடுகிறார்கள் என்று சொல்ல முடியாது!



இங்கே இருக்கும் பிரச்சினை என்னவென்றால் இன்றும் நாளையும் நடக்கின்ற மகா நாட்டில் நாம் பிரச்சினைகளை அடையாளம் கண்டாக வேண்டும். எனது பேச்சால் உங்களைப் புண்படுத்த வந்துள்ளேனென நீங்கள் நினைக்கக்கூடாது. அதே நேரத்தில் பிரச்சினைகளை மூடி மறைத்து விட்டுப் போவதற்காக இங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வரவில்லை. பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்வுகளைக் காணுவது இந்த மகா நாட்டின் நோக்கமாகும். விரும்பினால் மிச்சம் நைசாக அனைவரது தோள்களையும் தடவி எல்லோருக்கும் பட்டும் படாமலும் பேசி முடிப்பதற்கும் எனக்குத் தெரியும். அப்படிப் பேசமுடியாது! அது முனாபிக் தனமாக முடியும். அத்தகைய நயவஞ்சகத்தனமான பேச்சு அவசியமில்லை. நாளைக்கு அல்லாஹ்வுக்கு பதில் சொல்ல வேண்டும். எனது பேச்சு பிரச்சினைகளை கிளப்பிக் கொண்டிருக்கும். மகா நாட்டின் நோக்கம் என்னவென்றால் பிரச்சினைகளைக் கொண்டு வருவதுதான். யாரையும் புண்படுத்தும் நோக்கமல்ல. நாம் பிரச்சினைகளை கொண்டு வருகின்றோம் இன்ஷா அல்லாஹ் இன்றைக்கும் நாளைக்கும் நீங்கள் அவற்றுக்கு முகம் கொடுத்து நாளைக்குத் தீர்ப்பைத் தாருங்கள். நாளைக்குக் பின்னேரம் இன்ஷா அல்லாஹ்! வருகின்றேன். நாம் இங்கே இன்ஷா அல்லாஹ்! என்ன முடிவுகளை எடுக்கப் போகின்றோம் எனச் சொல்லுங்கள். அந்த முடிவுகளின் அடிப்படையில் இந்த உலமா காங்கிரஸ் மகாநாடு முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அடுத்த ஆண்டு வருகின்ற போது நீங்கள் எடுக்கின்ற தீர்மானம் இன்ஷா அல்லாஹ்! தலைவர் அவர்களே அடுத்த ஆண்டின் உலமா காங்கிரஸ் ஒக்டோபர் மாதம்தான் நடைபெறும். அதை நாங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அடுத்த 12 மாதங்களையும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி வகைகளை காண்பதில் நீங்கள் செலவிட வேண்டும்.

## உலமாக்களின் நான்கு மொழித் தேர்ச்சி!

உலமாக்களுடைய நாலு மொழித் தேர்ச்சியைப்பற்றி பேசிக் கொண்டிருந்தேன். இது உலமாக்களுக்கு மாத்திரமல்ல, இன்னுமொரு விடயத்தை சொன்னால் இன்னும் சில பேர் வெட்கப்படலாம். அறபு பேசும் விடயம் இருக்கின்றதே சோமாவதி துபாய்க்குப் போய் வரும் போது அவள் நன்றாகப் பேசுவாள் 4 , 5 வருடம் பணிப்பெண்ணாக வேலை செய்து விட்டு வருபவர்கள் நன்றாக அறபு மொழி பேசுவர். இந்த நாட்டிலே நாங்கள் ஒரு புள்ளி விபரம் செய்தோமென்றால் முஸ்லிம்களை விடவும் அறபு மொழி சதாரணமாகப் பேசக்கூடிய வல்லமை சிங்கள மக்களுக்குத்தான் உள்ளது.

இதுதான் உண்மை. குவைத், கட்டார், துபாய், ஓமான், லெபனான், சவூதி போன்ற நாடுகளுக்குச் செல்பவர்கள் அவர்கள்தான். நல்ல சரளமாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். நான் ஒரு தடவை பாராளுமன்றத்தில் சொன்னேன். சபாநாயகர் அவர்களே! இந்நாட்டில் ஒரு பிரஜை, அவனுக்கு ஒரு மொழி மாத்திரம் தெரியுமென்றால் அவன்மூன்றில் ஒரு பிரஜை, இரண்டு மொழி தெரிந்தால் அவன் மூன்றில் இரண்டு பங்கு பிரஜை, அவன் முழுப் பிரஜையாக இருக்கவேண்டுமென்றால் மூன்று மொழிகளும் அவனுக்குத் தெரிய வேண்டும். புரியவும் வேண்டும். ஆங்கிலம், தமிழ், சிங்களம் மூன்றுமே அவனுக்குத் தெரிய வேண்டும். 21ம் நூற்றாண்டு என்பது, உங்களுடைய உலமாக் காங்கிரஸ் அழகான Logo சின்னத்தில் போட்ட மாதிரி தனித்த இலங்கையல்ல. 21ம் நூற்றாண்டு என்பது இலங்கையை விடவும் சுருங்கிய ஒரு விடயம். 21ம் நூற்றாண்டு என்பது இந்த இந்த சிறிய இலங்கை விடவும் குறுகிய ஒரு தளமாகும். சவூதிக்குப் போன நேரம் ஒருவர் என்னிடம் கேட்டார். "You are from Sri lanka can you show it on the map என்று கேட்டார். I can show it. Take the map. எனக்கே கஷ்டமாக இருந்தது. அந்த இலங்கையை விடவும் சுருங்கிய ஒரு உலகம் அதுதான் 21ம் நூற்றாண்டு. ஒரு கவிதையிலே எழுதிய மாதிரி இங்கு சுபஹ் நேரம் உலகமெல்லாம் சுபஹ் நேரம் என்றுதான் நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இங்கு சுபஹ் நேரம். எத்தனையோ இடங்களில் அஸருக்கான பாங்கு ஒலிக்கின்றது. எத்தனையோ இடங்களில் அதேவேளையில் மஃரிபுக்கு பாங்கு ஒலிக்கிறது, எத்தனையோ இடங்களில் தஹஜ்ஜத்து தொழுது கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதே போன்று இந்த 21ம் நூற்றாண்டை தொலைக்காட்சி ரிமோட் கொன்ரோல் வைத்து நசுக்க நசுக்க நமது அறைக்குள்ளேயே கொண்டு வந்து சேர்க்கின்றது! ஆபிரிக்கா, அமெரிக்கா, தன்ஷானியா வருகிறது. உலகம் பூராகவும் காலடிக்கே வந்து விட்டது. எங்களுடைய படுக்கை அறைகளுக்குள்ளேயே எம்மை இந்த உலகம் நெருங்கி விட்டது. அந்த உலகத்தில் நாங்கள் சர்வதேசப் பிரஜையாக இருக்க வேண்டும். இதுதான் முக்கியம். சர்வதேசப் பிரஜையாக இருக்க வேண்டுமென்றால் நாலு மொழிகள் எங்களுக்கு அவசியம். இந்த நாட்டிலே நாலு மொழிகளையும் படிக்கக்கூடிய வாய்ப்பை அல்லாஹ்வுத்தஆலா ஒரேயொரு சமுதாயத்திற்கு மாத்திரம்தான் தந்திருக்கின்றான். அது வேறு யாருமல்ல முஸ்லிம் சமுதாயமே. மொழி ஆராய்ச்சியாளர்கள் இப்போது கண்டு பிடித்துள்ளார்கள். ஒரு மொழியைப் பேசுவதற்கு பல இலட்சக்கணக்கான சொற்கள் அவசியமில்லை. ஐநூறு சொற்கள் சரளமாகத் தெரிந்தால் அம்மொழியை நான்றாகப் பேசலாம். ஒரு மணித்தியாலமாக ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினால் எனது பேச்சிலிருந்த எல்லாச் சொற்களையும்



பொதுவாக எண் வரிசைப் படுத்தினால் அது ஆயிரத்துக்குள்தான் வரும். ஒரு மொழியைப் பேசுவதற்கு நிறையச் சொற்கள் அவசியமில்லை. அந்தப் பயிற்சியைத்தான் நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான தயார் படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

## ஒற்றுமைக்கு கிட்டும் வெற்றிகள்!

ஆகவேதான் அன்புள்ள சகோதரர்களே! இந்த நாட்டின் நிலைமையைப் பற்றிச் சொல்ல வேண்டும். கௌரவ அலவி மௌலானா அவர்கள் சொன்னார்கள். இந்த ஆட்சியில் உள்ள மூன்று முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றுபட்டு நின்ற போது, பெருமானார் (ஸல்) அவர்களை அவமதிக்கக்கூடிய வகையிலேயே நூல் எழுதிய இமாம் கொமெய்னி அவர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சல்மான் ருஷ்தியுடைய "நடு நிசிக் குழந்தைகள்" நூல் திரைப்படமாக்குவதை B.O.I. ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திட்டதன் பின்பும் தடுத்து நிறுத்தினோம். எங்கள் மதிப்பிற்கும், சங்கைக்குமுரிய அஸ்ஸெய்யித் அலவி மௌலானா அவர்களை முன்னால் விட்டு நாங்கள் போனோம். நீங்கள் நம்ப மாட்டீர்கள். அவ்வளவு பாரதூரமான பிரச்சினை அது. ஆனால் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு மூன்று நிமிடங்கள் கூடத் தேவைப்படவில்லை. அங்கு நாங்கள் பேசியது அல்ல விடயம். நாங்கள் மூன்று பேரும் ஒரே நிலைப்பாட்டை எடுப்பதை ஜனாதிபதியவர்கள் கவனித்தார் அவ்வளவுதான். இன்னுமொரு விடயத்தை நான் சொல்ல வேண்டும். வக்பு இல்லம் ஒன்று கட்டப்பட வேண்டும் என்று நீங்கள் பத்திரிகைகளில் ஐந்து வருடமாக வாசித்து வருகிறீர்கள். அமைச்சரவை முடிவு செய்து கிட்டத்தட்ட நான்கு வருடங்களாகிவிட்டன. யானை போய் வால் பொறுத்த கதை மாதிரி - வக்பு இல்லம் கட்ட நிலம் இல்லாது போய்விட்டது. எங்களுக்குக் கிடைத்த இடம் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமானது, மொத்தம் 82 பேர்ச்சஸ். அந்தக் காணியைத் தரமுடியாது. வேறு எங்கேயாவது போய் உங்கள் வக்பு இல்லத்தைக் கட்டுங்கள் என்று கடைசியாகச் சொன்னார்கள் எப்படியிருக்கும்? இந்தக் காணியில் கட்டுவதற்கே நான்கு வருடங்கள் போய் விட்டது, இன்னும் இலங்கைக்குள் காணி தேடப் போனால் இன்னும் நாற்பது வருடங்கள் போகலாம். கொழும்பில் முஸ்லிம்கள் கல்வி கற்பதற்கு ஒரு பாடசாலை கட்டுவதற்கு நிலம் இல்லை. கண்டியில் முஸ்லிம்கள் கல்வி கற்பதற்கு ஒரு பாடசாலை கட்டுவதற்கு அனுமதி கிடைத்தும் நிலம் இல்லை. இதே நிலைமைதான் கடந்த 1990 ஒக்டோபர் 7ம் திகதி இரவு அமைச்சரவையில் வந்தது. நாங்கள்

ஒரே பிடியில் நின்றோம் அசைக்க முடியாது. ஜனாதிபதி முஸ்லிம் அமைச்சர்களைப் பார்த்து சொன்னார் "எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய்க்கு இந்தக் காணியை விற்று அரசாங்கத்திற்கு எடுக்கலாம். நான் நாளைக்கே உங்களுக்கு பத்தரமுல்லையில் காணி தருவேன்" என்றார். மன்னிக்கவும் அம்மையார், எங்களுக்கு ஏலவே இணங்கிக் கொண்ட இடம்தான் வேண்டும் என்றோம். அவ்வளவுதான் உடனே அங்கீகாரம் கிடைத்தது. அது மட்டுமல்லாமல் வக்பு இல்லத்திற்காக 70 மில்லியன் ரூபாய் பணமும் அன்றிரவு ஒதுக்கப்பட்டது. நாம் ஒற்றுமையான நிலைப்பாட்டை எடுக்கின்ற போது பிரித்தாளும் தந்திரம் பலிக்காது! பிரித்தாளும் யுக்திதான் முஸ்லிம் சமூகத்தைப் பலவீனப்படுத்தி வருகிறது. நான் சொல்ல வருவதெல்லாம் வாப்பா, ராசா பிரிந்து விடாதீர்கள். அல்லாஹ்வின் அந்தக் கயிற்றினைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்! எவ்விடத்தில் அக்கயிற்றை பிடித்தாலும் பிரச்சினை இல்லை. பிரிந்து விடாமலிருப்பதே முக்கியமானதாகும்.

**எரிமலையின் உச்சியில் இருக்கின்றோமா?**

நமக்குள் உள்ள ஒற்றுமையின்மையால் இலங்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க முடியதுள்ளது. இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நாங்களும் நீங்களும் பேசிக் கொண்டிருக்கின்ற போது ஒரு எரிமலையின் மீது முஸ்லிம் சமுதாயம் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. எதைச் சொல்ல வருகின்றேன் என்பது "அல்ஹம்துலில்லாஹ்" உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

**இரத்த ஆற்றிலும் எமது பங்களிப்பா?**

கடந்த 20 ஆண்டுகளாக இந்த நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தம் செய்கிறார்கள். ஜே.வி.பி. யுத்தம் செய்தது. இந்த இரு யுத்தங்களிலும் சிங்கள வாலிபர்களும், தமிழ் வாலிபர்களும் மட்டுமே மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற பொறாமை தீயாக அனல் கக்கி எரிந்து வருகிறது. ஏன் இரண்டு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் இறக்க வேண்டும்? மூன்றாவது சமுதாயம் இரத்தம் சிந்தாமல் பார்வையாளர்களாக இருப்பதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்! இது ஒரு ஆருடம் கூறுகின்ற விடயமல்ல. அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதாக இருந்தால் முஸ்லிம்களுக்குள்ளேயே



வருகின்ற கருத்த வேறுபாடுகளின் அடிப்படையில்தான் அது ஏற்படுமேயொழிய வெளியே இருந்து அது ஒரு போதும் வர மாட்டாது! இந்த நிலைமையை ஏற்படுத்த எங்களைப் பயன்படுத்துவார்கள்.

**இஸ்லாமியத் தஃவா யாருக்கு?**

ஆகவேதான் அன்புள்ள சகோதரர்களே! உங்களிடம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். முக்கிய விடயங்களை அடையாளம் கண்டு கவனம் செலுத்துங்கள். தஃவா என்று சொல்லுகின்றோம். றசூல் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு தஃவாவைச் சொல்லிக் கொண்டா இருந்தார்கள். இல்லை. தஃவா என்பது மின்சாரம் போன்றது. மின்சாரம் என்பது வேறு. மின்சாரத் தொடர்பு வழங்குவதென்பது வேறு. நாமென்ன செய்து கொண்டிருக்கின்றோம். மின்சாரத்தை வழங்கிவிட்டு அவனை மின்சாரத்தாலேயே கொன்று விடப் பார்க்கிறோம். இஸ்லாம் என்ற மின்சாரத்தால் தாக்குண்டு மரணிக்கின்ற நிலைக்கு நம் முஸ்லிம் சமூகத்தை ஆக்கக் கூடாது! இன்று நாங்கள் கேட்கின்ற கேள்வி சம்மாந்துறைக்கு அருகில் உள்ள வீரமுனைக் கிராமத்தில் உள்ள எத்தனை பேருக்கு தஃவாவை நாம் சொல்லிக் கொடுத்திருக்கின்றோம்? காத்தான்குடி மக்கள் ஆரப்பத்தையிலுள்ள மக்களுக்கு தஃவாவை எத்தி வைத்திருக்கின்றோமா? மற்ற மனிதர்களை ஒதுக்கி வைத்திருக்கின்றோம். அல்லாஹ்வைக் கூட முஸ்லிம்களுடைய அல்லாஹ் என்றுதான் வைத்துக் கொண்டிருக்கின்றோம்.

இப்றாஹீம் நபியவர்களுடைய வரலாற்றில் - இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு முன் ஒருவன் நெருப்பை வணங்கிக் கொண்டிருந்தான். இப்றாஹீம் (அலை) அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. அதற்கு அல்லாஹ் கேட்கின்றான் "நீ ஏன் கோபப்படுகின்றாய்?" கோபம் எனக்கல்லவா முதலில் வர வேண்டும். என்னை நிராகரித்து நெருப்பை வணங்கும் அவனுக்கும் உணவளிக்கின்றவன் நானே! எனக்கே வராத கோபம் உனக்கு ஏன்?" என இறைவன் இப்றாஹீம் நபியவர்களிடம் கேட்கின்றான். நெருப்பை வணங்குபவனுக்கும் அவன்தானே உணவளிக்கின்றான். நம் எல்லோருக்குமுள்ள அல்லாஹ் "றப்பில் ஆலமீன்" "அல்லாஹு றப்பில் முஸ்லிமீன்" "அல்லாஹு றப்பில் முஃமினீன்" "அல்லாஹு றப்பில் ஆலமீன்" (மிகவும் பரந்த பாதை) இப்போது நாம் அல்லாஹ றப்பில் ஆலமின் என்ற பாதையில் போக முடியாததாலே அல்லாஹ் றப்பில் முஸ்லிமீன் என்பதனையும் விட்டுவிட்டோம்!

அல்லாஹ் ஹதீஸுல் குத்தூஸிலே "மனிதன் பாவமே செய்யாதவனாக இருந்திருந்தால் அந்த சமுதாயத்தை அழித்துவிட்டு பாவஞ்செய்யும் சமுதாயத்தை நான் உருவாக்கி இருப்பேன் என்று சொல்கின்றான். அல்லாஹ்வுடைய "றஊவ்.ஃப் றஹீம்" மன்னித்து அருள் பாலிப்பவன் எனும் பண்பு மனிதன் கண்ணீர் விட்டு அழும் போதுதான் வெளிப்படும். தனது பாவங்களுக்காக பிராயச்சித்தம் தேடும் போதுதான் இறைவனின் அருள்மழை பூரண வேகத்தில் தொழிற்பட ஆரம்பிக்கிறது.

ஆகவேதான் அன்புள்ள சகோதரர்களே! எரிமலையின் மேல் நிற்கும் நாம் எமது 19ம், 20ம் நூற்றாண்டின் மாசுபடிந்த பிசுபிசுப்பான சிந்தனைகளிலிருந்து வெளிப்பட வேண்டும். அவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டும். எல்லாவற்றிக்கும் மிக முக்கியமாக எமது மார்க்கத்தைப் பற்றிய தவறான புரிதல்களிலிருந்து நாம் முதலில் விடுபட வேண்டும். நமது மார்க்கத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் நாங்களாகவே மாட்டிக் கொண்ட விலங்குகளை உடைத்தெறிய வேண்டும். இதற்குரிய ஆயத்தங்களை உலமாப் பெருமக்கள் கண்டுபிடித்தாக வேண்டும்.

**இஸ்லாம் என்றால் சமாதானம்!**

இன்று எங்கு பார்த்தாலும் தீவிரவாதம், எங்கு பார்த்தாலும் ஜிஹாத். இந்த நாட்டில் பிரபாகரனைவிட மோசமானவன் அஷ்ர.ஃப். அஷ்ர.ஃப் ஜிஹாத் செய்யப் போகின்றார். செய்கின்றார் என பத்திரிகைகளில் எழுதியும் விட்டார்கள். இந்த அஷ்ர.ஃப் என்ற மனிதனுக்கெதிராக குற்றங்கள் சொல்லப்படுகின்ற போது, இந்த நாட்டில் 15 இலட்சம் முஸ்லிம்கள் உள்ளோம், ஒரு மனிதன் கூட ஜிஹாத் என்றால் என்னவென்று இன்னும் சொல்லவில்லை. சோம தேரர் சொல்லுகிறார். இந்த நாடு இன்னும் சில ஆண்டுகளில் முஸ்லிம் நாடாக மாறிப்போய்விடும் என்று. யாராவது இனி ஜிஹாத் பற்றிச் சொல்லுவார்களா? றசூலே கரீம் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜிஹாதில் மிகப் பெரியது நப்ஸோடு செய்கின்ற ஜிஹாத் என்று. ஜிஹாத் என்றால் வறுமைப்பட்ட முஸ்லிம்களை வறுமையிலிருந்து விடுதலை செய்வது, அடக்கப்பட்ட மக்களை அடக்கு முறையிலிருந்து விடுதலை செய்வது, உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்பது. தமிழர்களையும், சிங்களவர்களையும் வாளால் வெட்டுவதுதான் ஜிஹாதா? ஏன் நாங்கள் வாய் மூடி இன்னுமின்னும் மௌனிகளாக இருந்து கொண்டிருக்கின்றோம்?



அல்லாஹ் குர்ஆனில் சொல்லுகின்றான் "அல்லாஹ்விலும் அவனுடைய தூதரிலும் ஜிஹாதிலும் நீங்கள் நம்பிக்கை வைக்கா விட்டால் நீங்கள் முஸ்லிம்களல்லவென்று" இதுதான் மார்க்கம். ஏன் நாம் இஸ்லாத்தைத் துண்டு துண்டாகப் பின்பற்றுகின்றோம்? அல்லாஹ் இஸ்லாத்தில் நீங்கள் பரிபூரணமாக நுழைந்து விடுங்கள் என்று சொல்லவில்லையா? இந்நிலையிலிருந்து சமுதாயத்தை முதலில் நாம் மாற்ற வேண்டும்! இந்த வாய்ப்பும் பொறுப்பும் உலமாக்களிடமே இருக்கிறது.

அன்பான சகோதரர்களே! ஒரு முறை ஜனாதிபதி அவர்கள் என்னிடம் உங்கள் சமுதாயத்திற்கு ஒரு செய்தி சொல்வதற்கு எது இலகுவான வழி எனக் கேட்டார்கள். நான் அவரிடம் சொன்னேன் - எங்கள் உலமாக்கள் இருக்கின்றார்கள். ஒரு வெள்ளிக் கிழமை ஜும்ஆவே போதும் என்றேன். அந்த மார்க்கத்தை நாம் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். ஷூரா கவுன்சிலின் மகாநாடு ஒன்று B.M.I.C.H இல் நடைபெற்றது அதன் கரு சமாதானம். இஸ்லாம் என்றால் சமாதனம். இஸ்லாத்தை பார்த்து இன்று பயங்கரவாதம் என்கின்றார்கள். இஸ்லாத்தை மையமாக வைத்து சமாதானத்தை எவ்வாறு கொண்டு வரலாம் என்பதைப் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

**நமது பலவீனங்களுக்கு**
**இறைவனையும் றசூலையும் சாட்டுதல் முறையா?**

அன்புக்குரிய சகோதரர்களே! நான் அமெரிக்காவுக்கும் பிரான்ஸிக்கும் சவால் விடுகின்றேன் என முழங்கும் வெற்றுக் கோஷங்களில் எதுவும் நடைபெறப்போவதில்லை. நீங்கள் எந்தெந்த மஹல்லாக்களில் இருக்கிறீர்களோ அந்த மஹல்லாக்களில் சமாதானத்தை ஏற்படுத்தினால் நாடு முழுவதும் சமாதானம் வந்துவிடும். நீண்ட தூரப் பயணங்கள் ஒரு எட்டுடன்தான் ஆரம்பிக்கிறது. பெரும் சமுத்திரங்கள் ஒரு துளியுடன்தான் ஆரம்பிக்கிறது. இந்த நாட்டிலே சமாதானம் வரவேண்டுமென்றால் என்னுடைய மனதில் முதலில் சமாதானம் வரவேண்டும். "வலாஹௌல வலாகூவத்த இல்லாபில்லாஹி அளிய்யுள்அளீம்" என்று நம்புகின்றோம். இதன் கருத்து சக்தி யாரிடமுமல்ல, சகலதும் அல்லாஹ்விடமே உள்ளது என்று நம்பிவிட்டு தொலைக்காட்சிக்கும், மனிதன் செவ்வாய்க் கிரகத்திற்குப் போனதற்கும், இறைவனுக்கும் தொடர்பில்லை என்று சொல்வதா? எங்கள் இயலாமைகளுக்கு இறைவனையும் றசூலையும் பழி போடக்கூடாது. அல்லாஹ்வுடைய வலிமார்களுடன் நாம் தர்க்கிக்கின்றோம். உமர் பாறூக்

ஸித்தீக் (ரழி) அவர்கள் குத்பா ஓதிக் கொண்டிருக்கின்ற போது எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பல் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. "அந்தப் பக்கம் போக வேண்டாம்!" எனக் கட்டளை ஒன்று வந்தது. வீரர்கள் அக்கட்டளைக்குச் செவி சாய்த்தார்கள். யுத்த முனையிலிருந்து வெற்றி செய்தியுடன் வந்தவர்கள் சொன்னார்கள். "உங்கள் கட்டளையை நாங்கள் கேட்டோம்" என்றார்கள். இன்று நாங்கள் வொலிமார்களுடன் தர்க்கிக்கின்றோம். அல்லாஹ் இரண்டு பேருடன் யுத்தத்தைப் பிரகடனம் செய்கின்றான்.

வட்டி வாங்குபவர்களுடனும், வொலிமார்களைப் பற்றி தர்க்கம் செய்பவர்களுடனும் அல்லாஹ் யுத்தப் பிரகடனம் ஒன்றைச் செய்கின்றான். நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நெருப்போடு நாம் விளையாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒரேயொரு விடயத்தை மாத்திரம் இறுதியாக நினைவூட்ட விரும்புகின்றேன்.

**நமது கண்கள் இனியாவது விழிக்குமா?**

அல்லாஹ்வுத்தஆலா உலகத்திலே பெரும் வணக்கவாதியாக இருந்த ஒரு மனிதனைப் பார்த்து சொன்னானாம் "நீ நரகத்திற்குப் போ" என்று. அதற்கு அந்த மனிதன் "இறைவனே நான் தொழுதேன், நோன்பு பிடித்தேன்" என்றானாம். அது உனக்காகச் செய்தது என்றானாம் இறைவன். பள்ளிவாசல்களைக் கட்டிக் கொடுத்தேன், ஏழைக் குமர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தேன். "அதுவும் உனக்காகச் செய்தது" என்றானாம் இறைவன். எனக்காக நீ என்ன செய்தாய்? என்று இறைவன் கேட்டானாம். உனக்காகத்தானே எல்லாவற்றையும் செய்தேன் என அந்த மனிதன் பதில் இறுப்பாம். "இல்லை நீ எதையும் எனக்காகச் செய்யவில்லை. உனக்காக - உலகில் உன் புகழுக்காக - மற்றவர்கள் உன்னைப்பற்றி நன்மை சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் செய்தாய் என்பானாம் இறைவன். அதையும் அந்த மனிதன் மறுத்த போது - எனக்காக நான் கேட்டதை நீ மறுத்து விட்டாய் என இறைவன் பதில் கூறுவான். "நீயா? என்னிடமா? கேட்பதா? உனக்குத்தானே ஒரு தேவையுமில்லையே... என்று அந்த மனிதன் கேட்பான். அதற்கு இறைவன் பின்வருமாறு பதில் கூறுவான். ஒரு நாள் உனது வீட்டுக்கு பசியுடன் கால்கள் இல்லாமல் நொண்டி நொண்டி ஒருவன் வந்து புசிக்க உணவு கேட்டானே அது நினைவிருக்கிறதா என்பான் இறைவன். ஆம் என்பான் மனிதன். " அவனை விரட்டியது நினைவிருக்கிறதா?" மீண்டும் ஆம் என்பான் மனிதன். அப்போது இறைவன் அந்த மனிதனைப் பார்த்துக் கூறுவான் " உன்னிடம் பசியோடு வந்து உதவி கேட்டது வேறு யாருமில்லை



உன்னுடைய இறைவனான நானேதான்" என்று. எனவேதான் அன்புள்ள தோழர்களே கண்ணியத்திற்குரிய உலமாக்களே! எம்மிடம் வரும் ஒவ்வொரு மானிடத்தவனையும் இறைவனது தேவையாக நாம் பார்க்க வேண்டும். நாம் பழகும் ஒவ்வொரு மனிதனையும் இறைவனுடைய பிரதிநிதியாக நாம் காணவும் வேண்டும். நமது கண்கள் இனியாவது விழிக்குமா?

**அஸ்ஸலாமு அலைக்கும்.**

இந்தக்கைநூலுக்கு இத்தகையதொரு பின்னுரை அவசியமல்ல. இருப்பினும் எனது உரை முடிந்த பின்னர் சில சகோதரர்கள் வினாக்களைத் தொடுத்தர்கள். அந்த வினாக்களையும், அவற்றிகான விடைகளையும் மையமாக வைத்து சுருக்கமாகச் சில விடயங்களை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

அதில் இலங்கை ஜம்மியதுல் உலமா என்பது ஒரு உச்ச நீதிமன்றம் அல்ல எனும் கருத்துப்பற்றி ஒரு கேள்வி எழுந்தது. ஜம்மியத்துல் உலமாவுக்கு வழி தவறுகின்றவர்களை நெறிப்படுத்தும் கடமையில்லையா என வினவப்பட்டது. பதில் நிச்சயமாக உண்டு. நெறிப்படுத்தும் முயற்சிகள் நிதானமான வையாகவும், பாதிக்கப்பட்டவரின் தனிமனித கீர்த்திக்கு களங்கம் ஏற்படுத்தாததாகவும் அமைதல் வேண்டும். தீன் வழிப்பாதையிலே வளுக்கி விழும் ஒருவரை தடுக்கப்போய் அவரை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிடக்கூடாது!

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவுக்கு ஒரு யாப்பு உள்ளது. தனது யாப்பை ஜம்மியத்துல் உலமா முதலில் பின்பற்றுதல் வேண்டும். ஒரு பிரதேசத்தில் ஏதாவது பிரச்சினை நடந்தால் அது பற்றிய விசாரணையை அப்பிரதேச ஜம்மியத்துல் உலமாவின் கிளையே செய்ய வேண்டும். விசாரணை முடிவில் தரப்படும் சிபாரிசுகளின் படியே தாய்ச்சபை நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் விடுவது தனது யாப்பைத் தானே மீறுவதாகும்.

"முர்தத்" எனத் தீர்ப்பளிப்பதில் அவசரப்பட்டு முந்திவிடக் கூடாது. அவ்வாறுதான் தீர்ப்பளித்தாலும் அத்தீர்ப்பு உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படும் போது, போய் வாபஸ் பெற்று தலை குனியவும் கூடாது.

"ஷரீஆ கவுன்சில்" ஜம்மியத்துல் உலமா ஸ்தாபனத்தை பிளவுபடுத்த உருவாக்கப்பட்ட ஒன்றல்ல, ஷரீஆ கவுன்சில் ஒரு சுயாதீனமான ஸ்தாபனமாகும். ஜம்மியத்துல் உலமா சபை தொழிற்படாத காலங்களில் உலமாக்கள் நல்ல வழிகளில் சுயாதீனமாகச் செயற்பட வரும்போது அதற்கு நாம் எப்போதும் பக்கபலமாய் இருக்க வேண்டும்.



BMICHயில் நடைபெற்ற ஷரீஆ கவுன்சில் மகாநாடு, ஷரிஆவின் அழைப்பும் சமாதானமும் பற்றிய சர்வதேச மகாநாடு ஆகும். இந்த நாட்டுக்குத் தேவையான சமாதானத் தேடலில் ஷரீஆக் கவுன்சில் பெரும் பங்காற்றி உள்ளது. அப்போது வெளியிடப்பட்ட மௌலவி ஏ.ஸீ.ஏ.எம். புகாரி அவர்களின் கட்டுரையில் இந்த விடயம் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஜம்மியத்துல் உலமாவை ஷரீஆ கவுன்சிலும் ஷரீஆ கவுன்சில் நடவடிக்கைகளை ஜம்மியத்துல் உலமாவும் பலப்படுத்த வேண்டும். உலமாக் காங்கிரஸம் அப்படித்தான். அதுவும் ஜம்மியத்துல் உலமாவைப் பலப்படுத்தும்.

உலமாக் காங்கிரஸ் உருவாகும் வரை - ஷரீஆ கவுன்சில் உருவாகும் வரை ஜம்மியத்துல் உலமா ஒன்றாகத்தான் இருந்தது என்பது வரலாற்றைத் திரிவு படுத்துவதாகும். அதில் இலங்கை ஜம்மியதுல் உலமா ஆயுள்காலத் தலைவர் என்று கருதப்பட்ட அப்துல் ஸமத் ஹஸ்ரத் அவர்களின் காலத்திலேயே ஜம்மியத்துல் உலமாவுக்கு எதிரான சமாந்திர ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது என்பதும் வரலாறாகும்.

ஜம்மியத்து உலமா ஸ்தாபனத்தில் பல்றேுபட்ட கருத்துக்களை உடைய உலமாக்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைப் போன்றுபல்வேறு கருத்து வேறுபாடுகளை உடைய உலமாப் பிரிவுகளினதும் பிரதிநிதிகளைக் கொண்டதாக "பத்வாக் குழு" அமைக்கப்படல் வேண்டும். எல்லோரையும் இணைக்கின்ற ஒரு பெரும் ஆலாவட்டமாக அது அமைதல் வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர். கந்தூரிகளுக்கும், கொடியேற்று வைபவங்களுக்கும் போகிறார். அவர் ஒரு பிற்போக்குவாதி என்ற பிரச்சாரங்களும் உள்ளன. அழைப்பைக் கண்ணியப்படுத்த வேண்டியது ஒரு முஸ்லிமின் கடமையாகும். அழைக்கப்படும் இடங்களுக்கு அவர் போவார். கௌரவிப்பார் மற்றவர்கள் அவரை அழையாமல் இருந்துவிட்டு குறைகூறுவது அபத்தமாகும். முஸ்லிம் காங்கிரஸ், ஜமாஅத் இஸ்லாம், தப்லீக் இயக்கம், தௌஹீத் இயக்கம் என்பவற்றுக்கு எதிரானவை அல்ல, அவர்கள் அழைத்தாலும் சந்தேசமாகச் செல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஆயத்தமாகவுள்ளார். சிறிய சிறிய குழுக்ளாகப் பிரிந்து முஸ்லிம் சமூகம் இருக்கிறது. அந்த எல்லா சிறிய வட்டங்களையும் இணைத்ததாக ஒரு பெரிய வட்டத்தைக் கீறி - எந்தவொரு சிறிய வட்டத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் - முஸ்லிம் சமூகத்தின் அரசியல் ஒற்றுமையைப் பேணுவதே முஸ்லிம் காங்கிரஸின் இலட்சியமாகும்.

உலமாக்களை ஒரே குடையின் கீழ் ஒன்றுபடுத்த வேண்டும். முஸ்லிம்களை முற்றாக ஒற்றுமைப் படுத்தலாம் என நம்புகின்றவர்கள் இருந்தால் அவர்களை நாம் ஆதரிக்கின்றோம். அந்தப் பணியில் நீங்கள் இறங்குங்கள். நாம் உங்களுக்குப் பக்கபலமாய் இருப்போம். பணியைச் செய்யாமல் விமர்சிப்பதில் நேரத்தை விரயமாக்காதீர்கள். இறைவனில் நம்பிக்கையில்லாத ஒரு மௌலவியின் பிரச்சினையும் இங்கு சிலாகிக்கப்பட்டது. அவரது பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவரை அடையாளப்படுத்தாமல் அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். மூஸா நபியவர்களின் வாழ்வில் நடந்த பின்வரும் சம்பவத்தை நாம் மறந்துவிடக் கூடாது! இந்த அணுகலைப் பின்பற்றினால் மற்றவர்களின் இரகசியங்களைப் பேணி செயற்பட முனைந்தால் எமக்கு ஒளியமான எதிர்காலம் இருக்குமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மூஸா (அலை) அவர்கள் தியானத்திற்காக "துர்ஸீனா" மலையில் தவமிருக்கும் போது மக்களின் தேவைகளுக்கு இறைவனை வேண்ட சில பேரை நியமித்திருந்தார்கள். - அவர்கள் கேட்ட துஆ இறைவனால் கபூல் செய்யப்படாததைக் கண்ட மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம் ஏன் துஆவைக் கபூல் செய்யவில்லை எனக் கேட்ட போது துஆக் கேட்டவர்களில் ஒருவர் மற்றவர்களுடைய இரகசியங்களை பரகசியமாக்குபவராக உள்ளார் எனப் பதிலளிக்கப்பட்டது. மூஸா(அலை) அவர்கள் இறைவனிடம் யார் அவர் எனக் கேட்ட போது "இறைவனான நான் இரகசியங்களைப் பாதுகாப்பதில் யாவரையும் மிகைத்தோன்" நீங்கள் அவர்களை தௌபா செய்யச் சொல்லுங்கள் என்றானாம்.

அல்லாஹ் நம்மனைவரையும் நேர் வழிகாட்டி அருள்வானாக!

உலமா காங்கிரஸும் ஷரீஆ கவுன்சிலும் இன்னுமின்னும் உருவாக்கக்கூடிய உலமாக்களின் அமைப்புகளும் வேர்களாய் அமைந்து அதில் இலங்கை ஜம்மியத்துல் உலமா என்னும் பெரும் விருட்சத்தை பலப்படுத்துமாக!

ஆமீன்! அல்ஹம்துலில்லாஹ்!